295

No. M. 2210 வருஷ சந்தா ரூ. 1-8-0

& PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 AUGUST 1931 இதழ் 9



தனிப் பிரதி அணா 3.

வை11, M24J-M
N31·8·9
210035

...மோகினி ஆபீஸ்,
...26, தோடித் தெரு.
...ருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதியில் சஞ்சிகை வெளியாகும்

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட **ரூ. 1-8-0 தான்.** "**சாமளநாதன்**" சென்ற வாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 **அணா** கூடச் சேர்த்து **ரூ.** 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. **பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

13 OCT 1931

12-வது அதிகாரம்

கற்பரசியின் வீரம்—அற்பனின் அகந்தை

தங்குவதற்கு தனக்குச் சொந்தமான நிழல் இருக்கிறதென்று வெகு சந்தோஷமடைந்துகொண்டிருந்த ஸாவித்திரிக்கு, தன் வீடு விற்பனையாகிவிட்டதென்கிற வார்த்தையைக் கேட்டதனால் மிகவும் மனம் பதறிப்போய்விட்டது. நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்த சம்பவங்கள் யாவும் நிகழ்ந்தபிறகே அவள் இந்த திடுக்கிடும் வார்த்தையைக் கேட்டு வாடலுற்றாள். தன் கணவனைக் கண்டு பல தினங்களாகியும் "அவன் எங்கிருக்கிறான், என்ன செய்கிறான்" என்று தெரியாது ஒரு புறம் தத்தளிக்கின்றாள். வீட்டை வாங்கியதாகச் சொல்லும் மனிதனுக்குப் பதில் பேசவும், அவளால் கூடாது போய்விட்டது. சிறிது நேரம் செல்ல, பிறகு அந்தப் பெரியாரை நோக்கி "ஐயா! பேதையாகிய என் நெஞ்சம் பதறுகின்றது. உண்மையில் இவ் வீடு விற்பனையாகிவிட்டதா! என் பர்த்தா எங்கே? அவரை நீங்கள் கடைசியாக எங்கு எப்போது பார்த்தீர்கள்? என்னைத் தன்னந்தனியே விட்டுச் சென்றுவிட்டார். அவரை நான் பார்த்து வெகு நாட்களாகிவிட்டன. இவ் வீட்டை என்று விற்றார்? எத்தனை ரூபாயிக்கு விற்றார்? விற்ற பணங்களை என்ன செய்தார்? எனக்கு ஒருவிதமான விபரமும் தெரியாமையினால் என்னுடைய மனம் மிக்க வேதனையுற்றலைகின்றது. தமக்குத் தெரியுமாயின் தயவு செய்து தெரிவிக்கவேண்டும், என் துயர் கண்டு எனக்கிரங்கும் கடவுள் தற்போது தாங்கள் தான்." என்று மிக்கப் பரிதாபத்துடன் கூறினாள்.

சில தந்திரிகள் பிறர் சங்கீதக் கச்சேரிக்குச் செல்கையில் தாமும் வருவதாக டம்பமாகப் பேசி விடுவதோடு தமக்கு வேண்டியவர்களையும் அழைத்துக் கொண்டு தாராளமாக வந்து விடுகிறார்கள். டிக்கட்டிற்கு பணம் ஏது? முதலில் கிளம்பியவர்களின் தலையில் வடிகின்றது.

 210035

இதைக்கேட்ட வந்தவர் "அம்மா! உங்கள் நிலைமையைக் காண மிக்க விசனமாகவே இருக்கிறது. எனக்கு உங்களுடைய நிலைமை முன்னர் தெரியவராது. உங்கள் பர்த்தாவின் துர்த்தச்செய்கைகளை மட்டும் கேள்வியுற்றிருக்கிறேன். உங்கள் பர்த்தா எங்களுக்கு இவ் வீட்டை விற்றார் என்பதற்குப் போதிய சாட்சி இந்த விக்கிரையப் பத்திரம் இருக்கிறது. இதைவிட வேறு எதுவும் தேவை இல்லை; இதோ பாருங்கள்" என்று பத்திரத்தைக் காட்டினார். அதைப் பார்த்த ஸாவித்திரியின் மனத்தில் கொஞ்ச மிருந்த சந்தேகமும் நிவர்த்தியாகிவிட்டது. விழி மழை பெய்தவாறு நின்றாள். மீண்டும் பெரியவர் பேசத் தொடங்கி "அம்மா! உங்களுடைய பர்த்தா இதில் கண்ட தொகையை ரொக்கமாகக் கையில் வாங்கவில்லை. அவருக்கு கடன்காரர்களின் தொல்லை வெகு அதிகமாக ஆய்விட்டதாம்; ஆகையினால் அக்கடன்காரர்களே என்னிடம் நேரில் பெற்றுக்கொண்டார்கள். அவர்களுடன் ஓர் தாசிப் பெண்ணும் சேர்ந்திருந்தாள். அந்தப் பெண்ணுக்கு ரொக்கமாக 2500 ரூபாய் கொடுப்பதாக எழுதிக்கொடுத்தாராம். அந்த விதம் பணத்தைக் கொடுக்காமையினால் அப் பெண் வழக்கு தொடுத்து அதன் மூலம் பணத்தைப் பறித்துக்கொண்டு சென்றாள். உங்கள் கணவனார் கையில் எஞ்சி நின்ற தொகை சிறிதுமில்லை. கடன் தொல்லை அதிகமாய் விட்டமையினாலேயே—வாரண்டுகள் வேகமாகத் தொடர்ந்ததனாலேயே—இவ் வீட்டை விரைவில் விற்றார். அவருடைய வாரண்டுக்களின் தொல்லையினால் வெகுவாய் மனம் நொந்து தன்னுடைய சகாக்கள் முன்பு வருவதற்கு வெட்கி ஒரு கள்ளுக் கடையின் சொந்தக்காரர் வீட்டிலேயே இருக்கிறார். அங்கு இவருக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் ஏதேனும் இருக்கலாம். அதை வாங்கி அப்படியே உயர்தரச் சாராயமாகவும் கள்ளாகவும் குடித்துவிட்டு அவ் வீட்டிலேயே புரளுகின்றார்.

கோயிலுக்கு ஸ்வாமி தரிசனம் செய்யச் சென்றால் அங்கு நடக்கும் வேடிக்கைகளோ அநேகம். நாட்டுப் புறத்திலிருந்து வரும் மனிதர்கள் கடவுளை வணங்குவதும், கோபால கோத்திரம், கோவிந்த கோத்திரம் என்று கூறுவதும் அடக்கான் பேரில் ஒரு அர்ச்சனை, வளத்தான் பேரில் ஒரு அர்ச்சனை," என்று ஆவாரிப்பதும் வேடிக்கையாக விருக்கிறது. ரங்காசி

அவருக்கு சில சமயத்தில் சரியான அறிவும் இருப்பதில்லை என்பதை நான் பன்முறை பார்த்திருக்கின்றேன். நானும் அவருக்கு நன்மதிகளை அனேக விதத்தில் போதித்தேன். அவை யாவும் செவிடன் காதிலூதிய சங்க நாதம் போலவே ஆய்விட்டன. அவருக்கு இத் தீய பழக்கத்தை உண்டாக்கி அவருடைய செல்வத்தை எல்லாம் அழித்த பாவிகள் இப்போது யாரையும் காண வில்லை. அதோடு அவருடைய வீடு விற்பனையில் காலணு கையில் தங்கவில்லை என்று தெரிந்தபிறகு தண்ணீரற்ற குளத்தில் பறவைகள் தங்காது ஓடுவது போல ஓடிவிட்டார்கள். தான் தனது இஷ்ட சகாக்களினுல் இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதை அவர் சற்றும் தெரிந்துகொள்ளவே இல்லை. அவருடைய போக்கே தனித்ததாக இருக்கிறது. நான் அவரை இதற்கு முன்னுல் அறியமாட்டேன். வீடு சம்மந்தமாகத்தான் தெரிந்து கொண்டேன். அவருக்கு மனைவி மக்கள் யாரும் இல்லை என்று அவரே சொல்லியதால் நாங்கள் முதலில் அதை நம்பிவிட்டோம். வீட்டு விக்கிரையப் பத்திரம் எழுதியான பிறகு அவர் கூறியது யாவும் பொய் என்று தெரிந்தது. தெரிந்து என்ன செய்வது. அம்மா! உங்கள் நிலைமை இவ்வளவு துக்ககரமாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவர் உங்களை உங்கள் தாய் வீட்டிலேயே தள்ளிவிட்டார் என்று கேள்விப்பட்டேன். மகாலக்ஷ்மி போன்ற தங்களை அநியாயமாக அலையவிட்டுவிட்டு இந்த மனிதன் இவ்விதம் அழிந்து விட்டானே! என்ன கொடுமை. எல்லாம் கடவுளின் செயல். அம்மா! எனக்கு நேரமாகிவிட்டது. நான் சென்று வருகிறேன்" என்று வெகு பரிதாபத்துடன் கூறினுன்.

இதுகேட்ட சாவித்திரி "ஐயா! என் கதியின் சீர்கேட்டை எல்லாம் வல்ல இறைவன் தான் கண்ணுற்று நீக்கவேண்டுமே

ஸ்வாமியைக் காட்டி இவர்தான் ராமனென்றுல் "ராமா! ராமா!" என்று கத்துகிறுர்கள். ராமனை ரங்கனுதனென்றுல் "ரங்கா! ரங்கா!" என்கிறுர்கள். அவர்களுடைய பக்தியினுல் அதையேனும் செய்கிறுர்கள். நல்ல அறிவு இருப்பதாகக் கூறும் மனிதர்கள் தான் தெய்வபக்தியும் தேசபக்தியுமின்றி மிருகமாக அலைகின்றுர்கள்.

யல்லாது வேறு யாராலும் ஆகாது. என் பர்த்தாவின் தீய பழக்கத்தை பொழிக்கும் பொருட்டு நான் பட்ட முயற்சி எல்லாம் பலனற்றதாகிவிட்டது. என்னுடைய வார்த்தைகள் பூராவும் அப்போது அவருக்கு விஷமாகத் தோன்றின. உம். இவை எல்லாம் என்னுடைய பாபத்தினால் விளைந்த கேடேயன்றி பிறர் மீது குறை கூறல் சரியன்று. ஐயா! தாங்கள் எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். இவ்வகையில் என்னைத் தாங்கள் தங்கள் புதல்வியாகப் பாவிக்கவேண்டும். உங்கள் புதல்விக்கு நீங்கள் உபகாரம் செய்ய மறுக்க மாட்டீர்களல்லவா! அது போன்று எனக்கு இச்சமயம் தாங்கள் மறுக்காது உதவிபுரியவேண்டும். அதாவது என் பர்த்தா எந்த சாராயக் கடைக்காரர் வீட்டிலிருக்கிறாரோ அவ்வீட்டை எனக்குக் காட்டவேண்டும். அவ்வளவே போதும். உங்களுடைய வீட்டை உங்களுக்கு இன்றே ஒழித்துக் கொடுத்து விடுகிறேன். நான் அவருடைய முகத்தைப் பார்த்துப் பல நாட்களாகிவிட்டன. அவருடைய உதவிக்காக என்னுடைய ஆடையாபரணங்கள் முற்றும் கொடுத்துவிட்டேன். கடைசியில் இப்போது இவ் வீடேனும் இருக்குமென்று நினைத்தேன். அதுவும் போயிற்று. எல்லாம் அவனருள். எந்த காலத்தில் எவை வந்துற்றாலும் அவைகளெல்லாம் நன்மைக்காகத்தான் வந்ததாக நான் நினைக்கிறேன். கடவுள் எந்த பக்தரையும் பூர்ணமாகச் சோதிக்காமல் விடுவதே இல்லை. அதே போன்று என்னுடைய கதியும் இருக்கின்றது. இன்றுள்ள நிலைமையை மாற்றும் வல்லமை படைத்தக் கடவுளை வேண்டுவதைத் தவிர வேறு மார்க்க மறியேன். கடவுளை

ஏற்கெனவே பலஹீனமான நிலைமையிலுள்ள மனிதரின் வீட்டிற்கு 10 விருந்தாளிகள் வந்து அசையாது —கூசாது, உழைக்காது —வாட்டமாக உட்கார்ந்து விட்டால் அவர்களுக்கு நன்றாக வடித்துப் போட்டுச் சிரமப்பட்டதனால் திடீரென்று மயக்கம் உண்டாகி விடுவதால் அவர்களின் குழந்தைகளும் கணவனும் ஏங்கித் தவித்துத் துடிக்கும் படியாக ஆய்விடுகின்றது. எத்தனை நாளைக்கு விருந்தாளிகள் வாட்டமாக உட்கார்ந்து விடுகிறார்களோ அத்தனை நாளைக்கு வீட்டுக்காரர்களுக்குப் பலவிதத்திலும் உபத்திரவம், தேக கஷ்டம், தன நஷ்டம். எப்போதும் விருந்தினர் கூடவே இருப்பதால் எல்லாவற்றிற்கும் சங்கடந்தான்.

நம்பினோர் கைவிடப் படார். என்ற வாக்கியத்தைத் தான் நான் என்றும் துணையாகக் கொண்டிருக்கிறேன். நான் எனது அண்ணன் வீட்டிற்குச் சென்று அவரிடம் இச் செய்தியை உரைத்து இவ் வீட்டை காலி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்; ஆகையினால் தாங்கள் எங்கள் அண்ணன் வீட்டிற்கு வாருங்கள்." என்று கூறி கதவைப் பூட்டிக்கொண்டு அவருடன் தன் அண்ணனாகிய மதன கோபாலனிடத்திற்கு வந்தாள்.

இவளுடைய அலங்கோலமான நிலைமையைக் கண்ட மதன கோபாலன் "அம்மா! என்ன செய்தி! உன் புருஷனிருக்குமிடம் தெரிந்ததா! அல்லது ஏதேனும் விசேஷம் நடந்துவிட்டதா! ஏன் உன் முகம் கலங்கி இருக்கின்றது?" என்று அனுதாபத்துடன் கேட்டவாறு இருவரையும் உட்காரும்படியாகக் கூறினான்.

ஸாவித்.—அண்ணா! என் கதி நீங்கள் அறியாததன்று. மகா துர்ப்பாக்கியவதியான என்னை நீங்கள் உடன் பிறந்த சோதரியாக அடைந்ததனாலேயே மகா உத்தமியும், உங்கள் மனத்தைக் கவர்ந்த மங்கையுமாகிய பானுமதி இறந்துவிட்டாள், என் பொருட்டு சதா துயரமே யன்றி மன அமைதி என்றேனும் உண்டா! இல்லை. இதோ இப்பத்திரங்களைப் பாருங்கள். எனக்குத் தங்குவதற்காக இருந்த நிழலும் போய்விட்டது. நான் இனி தங்கள் நிழலில் தங்க வேண்டும்; அன்றி எம்பெருமான் நிழலில் தங்குவதற்கு உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டும், இவ்விரண்டையன்றி வேறு மார்க்க மில்லை என்றே நினைக்கிறேன். அண்ணா! என் பர்த்தா தற்போது ஒரு சாராயக் கடைக்காரன் வீட்டிலேயே வாஸம் செய்கிறாராம். அங்கு அவருடைய ஜீவனம் எவ்விதம் நடக்கின்றதோ! என்ன செய்கின்றாரோ! அவருடைய ஓயாக் குடிமட்டும் சதாது நடக்கின் றதாம். அவருடைய பழய நண்பர்கள் எல்லாம் அவரை விட்டு

சமயத்தையும் சந்தர்ப்பத்தையும் அறிந்து நடக்கக் கூடியவர்கள் சிலர் தான். சிலர் தங்கள் சொந்த வேலைதான் பிரதானம் என்று எண்ணி அதன்மீதே கருத்தாயிருந்து நடத்திக்கொண்டு—அகப்பட்டவைகளையும் சுருட்டிக்கொண்டு—கம்பி நீட்டி விடுகிறார்கள்.

ஓடிவிட்டார்களாம். அண்ணா! வீடு விற்ற பணம் பூராவும் கடன் தொல்லைக்கே பற்றா தொழிந்துவிட்டதாம். இனி வேறு வழியே கிடையாதாம். அண்ணா! நான் என்ன செய்வேன்? என்னுடைய வருத்தத்தையே தங்களிடம் மூட்டை கட்டிக்கொண்டு வருவதற்கு என் மனம் அஞ்சுகின்றது; எனினும் நான் யாரிடம் சென்றுரைப்பேன். என் நிலைமையை யார் செவிசாய்த்துக் கேட்பார்கள். என் பிறவிக் கேட்டைக் கேட்ட பிறர் கைகொட்டியன்றோ நகைப்பார்கள்.

மதன.—அம்மா! சாவித்திரீ! என் வீணாக துன்பப்பட்டு வாடுகிறாய்! எல்லாம் ஈசன் செயல். நீ வருந்துவதற்கும் அதைக்கேட்டு நான் கலங்குவதற்கும் இம்மண்ணில் பிறந்துவிட்டோம். இனி அதைத்தடுத்து இன்பமாக வாழ்வதற்கு நம்மால் இயலுமா! கடவுள் கண்ணோக்கினால் உன் துன்பம் நீங்கலாம். என் கதி அதோகதி என்பதைக் கடவுளே செய்துவிட்டார். இனி அதற்கு விமோசனமே இல்லை.......உம். உனக்குள்ள இன்பவீடு முதலில் மறைந்தது. இம் மண்வீடும் இப்போது மறைந்தது. இதற்கு விசனமென்ன. ஒன்றுமில்லை. உன்னுடைய மனத்தையும் கற்பையும் சோதிக்கவே கடவுள் இவ்விதம் செய்கிறார். இனி அவ்வீட்டை அவர் வயமாக்கிவிடுவதில் தாமதமேன். ஐயா! தாங்கள் கவலைப்படவேண்டாம்; இன்றே காலி செய்துவிடுகிறேன், தயவு செய்து இவளுடைய பர்த்தா இருக்குமிடத்தைமட்டும் காட்டுவீர்களானால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு"—என்று வேண்டிக்கொண்டான்.

அதன் பிறகு வந்த மனிதன் நாகசாமி தங்கி இருக்கும் சாராயக் கடைக்காரன் வீட்டின் அடையாளமும் நம்பரும் தெரிவித்து உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான். அன்றே மதனகோபாலன் ஸாவித்திரியின் வீட்டைக் காலி செய்து அச்சாமான்களை எல்லாம் தன் வீட்டிலேயே கொண்டு சேர்த்துவிட்டான்.

"எனக்கு கண் காட்சியின் மீது ஆசையில்லை. நீ அழைத்ததால் வந்தேன்." என்று சிலர் தம் ஆவல் தீர எல்லாவற்றையும் பார்த்து விட்டு—அதற்கான செலவை வைத்து விட்டு—பிறகு இந்த வார்த்தையைக் கூறுகின்றார்கள். இது என்ன நெஞ்சத் துணிவோ தெரியவில்லை.

ஸாவித்திரி.—அண்ணா! என்னை என் பர்த்தா இருக்கும் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். நான் அவரிடத்தில் சில விஷயங்களை நேரில் பேசி அவரை அழைத்துக்கொண்டு வருகிறேன். அவருடைய தீய மதியைத் திருப்பவேண்டுவது என் கடமை யல்லவா! ஆகையினால் தடை சொல்லாது என்னை நீங்கள் அவ்வீட்டிற்கு அழைத்துச் செல்லவேண்டும்.—என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அதற்கு மதனகோபாலன் "அம்மா! நான் உனக்குத் தடை சொல்லவில்லை என்றாலும் கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை விற்கும் கடைக்காரன் வீட்டிற்கு நீ நேரில் சென்றால் அங்கு இன்னுமுள்ள கட்குடியரால் உனக்கு என்ன தீங்கு நேருமோ என்று சற்று அஞ்சுகிறேன். குடித்த வெறியர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து உன்னைத் தாக்கினால் நீ என்ன செய்வாயம்மா! உன் பர்த்தாவின் பக்க பலம் உனக்கு உண்டானால் நீ எல்லாம் செய்யலாம். உனக்கு அதனால் பயமற்றும் இருக்கலாம். உனக்கு அப்பாக்கியம் கிடைக்கவில்லையே! அங்ஙனமிருக்க உன்னைத் தனியாக நான் எவ்விதம் அனுப்புவது என்றுதான் சற்று யோசிக்கின்றேன்.

ஸாவித்.—அண்ணா! நீங்கள் யோசிப்பது என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் என்னுடைய கதியை நினைத்துப் பார்க்கின் என் மனமே என்னை வெறுக்கின்றது. நான் பர்த்தாவின் முகத்தையே கண்ணால் கண்டு பல நாட்களாகிவிட்டதால் அவரை முதலில் பார்க்க வேண்டுமென்கிற வேட்கை என் மனத்தில் பறக்கின்றது. அவரைப் பார்த்துவிட்டு என் விசனம் தீர அவருடன் கதறினால் என் மனத்திலுள்ள துக்கம் சற்று தணிவடையும்போல் தோற்றுகின்றது. என்னுடைய மான அவமானம் முற்றும் என் பதியின் பொறுப்பிலுள்ளது. கடவுளையே நம்பிய பேதையாகிய என்னை அக்கடவுள் மான மிழந்து வாழச்செய்யமாட்டார் என்பதே எனது

"என்ன நாவலோ, நரிவாலோ எனக்குப் பிடிக்கவே இல்லை. அதைக் கண்டாலும் பிடிக்கவில்லை" என்கிறாள் ஓர் அம்மாள். அத்தம்மாளுக்கு ஜீவனம் எப்படி நடக்கிறதென்றால் அனேக நாவல்கள் அச்சிடும் மூலம் (அச்சாபீசால்) நடக்கின்றது.

துணிபு. ஆகையினால் எனக்கு அப்படி ஏதேனும் மானக்கேடான நிலைமை வந்துற்றால் என்னுடைய பர்த்தா அதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றாரா! மனைவி என்கிற பாசத்தினால் மன மிரங்கிப் பரிந்து வருகிறாரா என்பதைப் பார்க்கவேண்டும். என் தலை யில் அன்று எழுதியதை இனி மாற்றி எழுதமாட்டார். ஆகையி னால் நடப்பது நடக்கட்டும் என்று கடவுள் மீது பாரத்தைப் போட்டு நான் செல்லத் தீர்மானித்துவிட்டேன். என்னை அழைத்துச் செல் லுங்கள்." என்று கெஞ்சினாள்.

பிறகு மதனகோபாலன் ஒருவாறு இசைந்து ஸாவித்திரியை அழைத்துக்கொண்டு கள்ளுக்கடைக்காரன் வீட்டிற்குச் சென்றான். அப்போது மாலை 3 மணி சமயமாகையினால் சில நாகரிகப் பிர புக்கள் பகிரங்கமாக விற்கும் கள்ளு சாராயக் கடைகளில் சென்று குடிப்பதற்கு அஞ்சி இந்த வீட்டிலேயே வந்து ரகஸியமாக சாரா யம், கள்ளு முதலியவற்றைத் தாராளமாகக் குடித்துச் செல்வது வழக்கம், அதே போல இன்றும் அனேகர் அங்கு கூடி இருக்கக் கண்ட மதனகோபாலன் "அம்மா! ஸாவித்திரி! இதோ பார்த்தாயா! இவர்கள் கடைவாசலில் மொக்கைக் கள்ளைக் குடித்துவிட்டு சந்தி சந்தியாகத் திரியும் கனவான்களல்ல. ரகஸியமாக வாங்கிக் குடித்து விட்டு குடிக்காதவர்களைப்போல நடிக்கும் புண்ணிய மூர்த்திகள். இவர்களின் எதிரில் ஓர் பெண்மணியாகிய நீ சென்று நின்றால் இவர்கள் உன்னை என்ன சொல்வார்களோ, செய்வார்களோ! ஜாக் ரதை; நான் இவ்விடத்திலேயே இருக்கிறேன்." என்று கூறி வீதி யிலேயே ஒருபுறமாக நின்றான்.

தனிமையில் விடப்பட்ட நமது மடமயிலாள் தைரியமாக அவ் வீட்டினுள் புகுந்தாள். தன் கணவன் எந்தப் பக்கத்திலிருக்கின்

விவாகம் முடிந்த மறுநாள் பரிசாரகனை பணச்செலவின் நிமித்தம் அனுப்பிவிட நேருகிறது. வந்த விருந்தினரோ பெருமாள் தரிசனத்தை வேண்டி தங்குவதாகக் கூறி பின்னும் 4 நாள் உட்கார்ந்து விடுகிறார்கள். வீட் டில் வேலை செய்யவோ முடிவதில்லை, சமையலோ 10 மணிக்குத் தயாராக வேண்டும். ஒத்தாசைக்கோ ஒருவருமில்லை. என்ன செய்வது. அப்பப்ப! திண்டாட்டம்!

றான் என்ற எண்ணங்கொண்டு நாற்புறமும் பார்த்தாள். ஆகா! கள்ளு மொடாக்கள் வைத்திருப்பதையும் சாராயங்கள் வைத்திருப்பதையும் அவ்விரண்டினுடைய துர் மணம் மூக்கைத் துளைப்பதையும் கண்டு சகிக்கக்கூடாத அருவருப்பும் குமட்டலும் கொண்ட சாவித்திரி "ஐயோ! ஆபாஸமே! அசங்கியமே! அனாசாரமே! இத்தகைய துர்மணமுள்ள இப்பொருள்மீதா மயக்கமுற்று பணத்தையும் கொட்டித் தமது அறிவையும் போக்கிக்கொண்டு அநியாயமான கெட்ட பெயரையும் வாங்குகின்றார்கள். ஐயோ! என்ன முட்டாள் தன்மையான செய்கை இது!" என்று தனக்குள் தான் மனத்தில் எண்ணியவாறு சுற்றுமுற்றும் பார்த்தாள்.

இவளுடைய உசிதமான கதர் உடையையும், கள்ளுக்கடைக்காரன் வீடு என்கிற அச்சம் சிறிதுமில்லாது தைரியமாக உள்ளே பிரவேசித்திருக்கும் துணிவையும் கண்ட அங்குள்ளோர் வியப்புற்று நமது பூங்கொடிபோன்ற சாவித்திரியை உற்று நோக்கி ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். அக்கூட்டத்தின் ஓர் மூலையில் ஒரு கையில் அன்னிய பதார்த்தத்துடன் கூடிய தோசையை வைத்துக்கொண்டு, மற்றொரு கரத்தில் மொந்தையில் கள்ளை வைத்துக் கொண்டு குடித்தவாறு வீற்றிருந்த தனது பர்த்தாவைக் கண்ணுற்ற சாவித்திரி மனம் பதறி வெகு விசையாக இமைப்பொழுதில் அவனருகில் சென்று வெகு துணிகரமாக அக்கள்ளு மொந்தையை வெடுக்கென்று பிடுங்கி அத்தனை குடியர்களின் முன்னிலையிலும் தபீர் என்று போட்டு மொந்தை பொடிசூரணமாகும்படிக்கு உடைத்தாள். அவன் கையிலிருந்த தோசையையும் கறியையும் வீசி எறிந்தாள். அவனுடைய இரு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "நாதா! என் பிராணநாதா! இன்னுயிர்த்

விவாகத்திற்கு வாங்கும் சாமான்கள் சமயற்காரனால் பாதி களவாடப் படுவதோடு சாக்கடைக்குப் பாதி செல்கின்றன. வந்துள்ள விருந்தாளில் சிலர் பாதியை மறைத்து விடுகிறார்கள். ஓட்டைப்பாத்திரத்தில் தண்ணீர்விடுவது போல எத்தனை சாமான் வாங்கினாலும் இல்லை என்ற சொல்லையே சமயற்காரன் கூறுகிறான், வீட்டுக்காரர்கள் என்னதான் செய்வார்கள். பெண்ணைப் பெறுவதும் போதும்; கண்ணைக் கசக்குவதும் போதும்.

துணைவா! இந்த அனியாயமான—ஈனமான—நிலைமையில் நம்மைக் காண என்னுள்ளம் பதறுகின்றதே! ஐயோ! அளவற்ற செல்வம் படைத்து அபரிமிதமான புகழுடன் விளங்கிய நமது மேன்மையை முற்றும் இப்பாழுங் கள்ளும் சாராயமும், குதிரைப் பந்தயமும் வாயில் போட்டுக் கொண்டு ஏப்பம் விட்டு விட்டதே! என் வார்த்தைகள் முற்றும் ஆதியில் மிக்க மதிப்பற்றதாக விளங்கினவானாலும் அவற்றின் மதிப்பைத் தாங்கள் அறியும் வேளையைக் கடவுள் நன்ருகக் காட்டுவார். அவர் கண் மூடியல்ல, என் அன்பார்ந்த சகோதரர்களே! போதைப்பொருளை விற்கக் கூடிய பெரியாரே! உங்களனைவருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அனியாயக் கட்குடியினுல்—சாராய பானத்தினுல்—நீங்கள் எந்த நிலைமையை அடைந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள், உங்கள் வீட்டு மக்கள்—என்னைப்போன்று நன்ருக அனுபவத்திலறிந்து நொந்தவர்கள் தான்—இதைத் தெரிந்து கொண்டிருப் பார்கள். என் பர்த்தாவின் இத்திய பழக்கத்தினுல் எங்களுக்கிருந்த அனேக ஆயிரம் பணத்தைத் தோற்றதோடு, சிங்கதயை உருக்கும் குதிரைப் பந்தயத்திலும் பகிர்ந்து கொட்டித் தோற்று இறுதியில் சந்தியில் நின்றுவிட்டதை என் மன மறிந்து வேதனைப் படுவதுபோல மற்றவர்கள் படுவார்களா? உங்கள் செய்கையினுல் நீங்கள் அபாரமான சந்தோஷத்தை அடையலாம். அதனுல் சகிக்கக் கூடாத சங்கடத்தை யடைந்து உயிர் துடிப்பவர்கள் உங்கள் மனைவியும் மக்களுமாவார்களேயன்றி கள்ளுச் சாராயக் கடைக்காரர்கள் ஆகமாட்டார்கள். அன்பர்களே! உங்கள் பணத்தையும் உங்கள் அறிவையும், உங்கள் நற்குணத்தையும், உங்கள் உயர் கீர்த்தியையும், உங்கள் நன் மதிப்பையும் அடியோடு வேரறுக்கும் வேர்ப்புழு கள்ளும், சாராயமும் என்பதை நீங்கள் இப்போது அறியாமலிருப்பினும் உங்கள் கை வரண்டு விட்ட காலையில்—வறுமை வந்து பிடிக்கும் காலையில்—உங்களைப் பலரும் கண்டு ஏசுங்காலையில்—

வேலை மெனக்கிட்டு வீடு வீடாக அழைக்கும் வேடிக்கையில் "எங்காணும் உமக்கென்ன இத்தனை பிகுவு. காலை முதல் கூப்பிடுகிறேன் சற்று வந்தால் என்ன?" என்று அதிகாரம் வேறு செய்யும் வயிற்றெரிச்சலை என்ன வென்பது? இதனுல் மன வெறுப்பே உண்டாகின்றது.

உங்கள் இருதயத்தை நீங்களே தொட்டுப் பார்த்துக் கொண்டு அக் காலையில் நீங்கள் அறிவீர்கள். அப்போது அறிந்து வருந்தி உபயோகமென்ன? மான மழிந்து, சீர் குலைந்து, செல்வம் சிதறி, சித்தம் பதறி, வறுமை நிறைந்து, உற்றார், பெற்றார், சுற்றத்தார் முதலியோரால் இகழப்பட்டு ஓட்டாண்டியாகத் தெருவில் நின்ற பிறகு எதை எண்ணி என்ன பலன் கிடைக்கும். இழந்து விட்ட பண்டங்களை மீண்டும் கைப்பற்ற முடியுமா! என் சகோதரர்களே! இக் கள் குடிப்பதை வேண்டாமென்று தடுப்பதனால் நாங்களுடை யும் பலன் ஏதேனும் உண்டா! ஒன்றுமில்லையே! உங்களுடைய நலனைக் கோரியல்லவா நாங்கள் தடுக்கின்றோம். குடிகாரன் என்ற பெயர் பெற்று விட்ட பிறகு அதை மாற்றுதற்கு முடியுமா! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வ தெங்ஙனம்? எத்தனை ஏழை மக்களின் குடிகள்—மக்கள், மனைவிகள்—இந்தப் பாழுங் கள் குடியி னால் வருந்தி அல்லலுற்று இத் தொல்லுலகையும் விட்டு அனுபால மரணமாக மடிந்திருக்கிறார்கள். ஐயா! ஏழைகளின்மீது இரக்கம் காட்டி அவர்களை நல் வழிப்படச் செய்பவும் சீரும், சிறப்பும், சந் தோஷமும் அடைந்திருக்க வேண்டியல்லவா நமது காந்தியடிகள்—உலகம்போற்றும் உத்தமர்—பாடுபட்டு வருகின்றார். இப்பாழும் மது வகையின் துர் நாற்றம் குடலைக் குமட்டுகின்றதே! பாழுங்கள்ளைக் குடித்துப் பாழாகிக் கெட்டு அழிந்த அன்பர்களே அக் கள்ளின் தீமையையும், அதில் உள்ள அபாயத்தையும் எடுத்துக் கூறி எத்த னையோ பேர்கள் வெறுத்திருக்கிறார்கள். இப்பொழுது மகாத்மா காந்தியின் உத்தரவினால் கள்ளுக்கடை மறியல் நடந்துகொண்டிருப் பது நீங்கள் யாவரும் அறிந்த விஷயம் அக் கடைகளில் மறியல் செய்யும் நண்பர்களில் சிலர் தாங்கள் முன்பு குடித்திருந்ததாயும் அப்பொழுது அக் கள்ளு மொடாவில் எலி, பாச்சை, கறுப்பாம் பூச்சி, பல்லி, எறும்பு, கொசு, முதலியன விழுந்து செத்துக் கிடந்த தைத் தாங்கள் நேரில் கண்டு மனம் வெறுத்து அன்று முதல் கள்

சிலர் வார்த்தையைக் கேட்ட உடனே மயங்கிப் போய் அவ்விடத்தி லேயே இன்னும் இரண்டு நாளைக்குத் தங்கி விடுகிறார்கள். தங்கிய பிறகோ "ஏன் இவ்விடம் தங்கினோம்?" என்று வருந்துகிறார்கள்.

குடியை விட்டு விட்டதாயும் அத்தகைய கள்ளைக் குடிப்பவர்களையும் கூடாதென்று அனுபவத்துடன் மறியல் செய்ய வந்ததாயும் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டு நான் பரம சந்தோஷத்தை அடைந்தேன். என்னுள்ளமே பூரித்தது. இன்னும் கள்ளின் கொடுமைகளைப் பற்றி அந்த நண்பர்கள் அனேக விதமாக எடுத்துரைத்தார்கள். என்னரிய பிராண நாதா! மற்ற சகோதரர்களே! கள்ளுக் கடைக்காரர்களே! கள்ளின் துர்க்குணத்தினால் வரக்கூடிய தீமையும் பாபமும் அநந்த மிருக்கின்றன. ஐயா! ஆதியில் பெரியார் எல்லாம் கோயிலில்லா ஊரில் குடி யிருக்க வேண்டாம் என்றார்கள். கடவுளிடத்து பக்தியினால் பெரியார் கூறிய வாக்கியம் உலகமறிந்தது. கோயில் எந்த விடத்திலிருக்கிறதோ, அந்த விடத்தில் ஒரு குளமும், அதனருகில் ஒரு சோலை முக்கியமாக அமையப் பெற்றிருக்கின்றது. அது எதற்காக என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். அந்த சோலையில் தென்னை மரங்கள் தான் அதிகமாக விருக்கும். அந்த தென்னை மரத்தை அங்கு அமைத்ததன் நோக்கமோ வெகு மேன்மையான தாகும். அதாவது, தென்னை மரமானது சாக்ஷாத் கருணா மூர்த்திக்கு ஒவ்வொரு விதத்திலும் உபயோகப் பட வேண்டுமென்பதே பெரியாரின் கொள்கையாகும். இளநீரினால் கடவுளுக்கு அபிஷேகம் செய்வது, தேங்காய் உடைத்து நிவேதனம் செய்வது, பஞ்சாம்ருதம் செய்வது, தென்னை மட்டைகளிலுள்ள நார்களைக் கயிறாகத் திரித்து வாகனங்கள் கட்டுவதற்கும் தேர் இழுப்பதற்கும், பந்தல் போடுவதற்கும், வெட்டிய மரங்களை இன்னும் வேறு விஷயங்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளவும், தேங்காய் கொட்டாங்கச்சிகளை சிலவற்றிற்கு உபயோகிக்கவும், இன்னுமுள்ள சணல், பாளை முதலியவற்றை அடுப்பு எரியப் போடவும், ஆக பலவிதத்திலும் உத்தமமான விஷயங்களில் செலுத்

விவாகம் முடிந்த பிறகு சில பாட்டிமார்கள் உட்கார்ந்து பேசத் தொடங்கி விட்டால் "அவள் சாப்பிட வரவில்லை, இவள் டிபனுக்கு வரவில்லை. அவள் அதிகமாக மாற்றிக் கொண்டு போய் விட்டாள்;" என்ற பாடம் வரிசையாகப் பாடத் தொடங்கி அதன் மூலம் சிறு சண்டையும் உண்டாகின்றது.

அவதற்கு சோலைகளை அமைத்தார்கள். பின்னும் உற்சவாதி காலங் களில் வரக்கூடிய ஜனங்கள் நிழலில் இளைப்பாறும் பொருட்டும் அவை உபயோகப்படுகின்றன.

இத்தகைய உத்க்ருஷ்டமான வகையில் பயன் பெறக்கூடிய இத் தென்னை மரத்தைக் கேவலம் மனிதனுடைய அறிவையும், பணத்தையும், கீர்த்தியையும் அடியோடு கொள்ளை யடித்துக் கொண்டு போகக் கூடிய போதைக் கள்ளிறக்கி அதனால் பொருளீட் டிக் கடவுளுக்கு அப் பணத்தைச் செலுத்தினால் அந்தக் கடவுள் அதை ஏற்றுக் கொள்வாரா! ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட் டார். அவருக்கு அந்த பணத்தினால் செய்யும் எந்த காரியமும் சம்மதமே ஆகாது. அந்த விடத்தில் கடவுள் முதலில் இருக்கவே மாட்டார், கோயிலைச் சேர்ந்த சோலைகளிலுள்ள மரங்களை இப் பாழும் குடி கெடுக்கும் கள்ளுக்கு விடுபவர்கள் தர்மகர்த்தர்கள் என்ற பெயருக்குச் சற்றும் பொருத்த மானவர்களாவார்களா! ஒரு போதும் ஆகமாட்டார்கள், எந்த விடத்தில் சத்தியமும், நியாய மும், ஏழைகளிடத்தில் அன்பும், தூய குணமும் பொருந்தி இருக் கின்றனவோ, அந்த விடத்தில் தான் கருணா மூர்த்தி தன்னுடைய அருளைக் காட்டுவான்.

அன்பர்களே! நான் இப்போது பேசுவதைக் கேட்க நீங்கள் வெறுப்புறுவதை அகத்தது காட்டும் பளிங்கு போற் கடுத்தது காட்டும் முகம் என்ற பழமொழிப்படி உங்கள் முகம் நன் றாகக் காட்டுகின்றது. அம்மட்டு மில்லாது உங்கள் பான கோம் வீணே செல்வதால் சீற்றமும் உண்டாகுகின்றது. சந்தி சந்தியாக இருக்கக் கூடிய கள் கடைகளில் வெட்கமின்றி வீதியிலேயே மொந்தை மொந்தையாகக் குடித்துவிட்டு தெருவில் ஆடிப் பாடிக் கொண்டே அறிவற்றுத் திரியும் அற்பர்களைப்போ லல்லாது ஏதோ கொஞ்சத்திற்குக் கொஞ்சம் மானத்திற்கு அஞ்சி ரகசியமாக இவ்

ஒருவர் சாப்பிட வருவதற்கு நேரமாகி விட்டால் மற்றவர்களுக்குப் பசி தாங்க முடிய வில்லை. சாப்பிடவும் நினைவு; சாப்பிட்டால் என்ன நினைப் பார்களோ என்கிற எண்ணம், பசித்தவர்கள் சாபமிட்டவாறு மரியாதை செய் கிறார்களாம்; இதென்ன வேடிக்கை!

விடத்திலேயே நீங்கள் குடிக்க வந்திருப்பதால் கேவலம் அறிவழிந்த கட்டைகளைப் போல நீங்கள் இருக்கமாட்டீர்கள்; மானத்தில் கொஞ்சம் திருஷ்டி இருப்பதுபோல அறிவும் சொல்பமிருக்குமென்றே நம்பி நான் துணிவுடன் சொல்கிறேன். என் பர்த்தா என்னைக் கொலைசெய்துவிடினும் சரியே, நான் அவரது காலை விடமாட்டேன். நீங்கள் இக் குடி கெடுக்கும் கள்ளைக் குடிக்காது விட்டுவிடவேண்டும். வேண்டாம்; வேண்டாம். என் பிராண நாதா! நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். தங்கள் திருக் கரத்தினால் நான் அடிபட்டு வெகுதினங்களாகிவிட்டதால் என்னை நீங்கள் அப்போதிருந்து அடிப்பதை ஆநந்தமாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த உதை கிடைக்காமலேயே நான் இத்தனை நாட்களாக ஏங்கித் தவித்தேன். என் சகோதரர்களே! இதோ என் மேனியிலுள்ள தழும்புகளைச் சற்று கவனித்துப் பாருங்கள். என் பர்த்தாவின் பணத்தையும், குணத்தையும், அறிவையும் பறித்துக்கொண்ட சண்டாளக் கள் குடியின் மூலம் என் பர்த்தா எனக்களித்த பரிசாகும் அவைகளையும் நான் வெகு உத்சாகத்துடனேயே ஏந்திக்கொண்டேன். இதனால் என்னுயிர் நீங்கினும் சரியே! என்னை அடித்ததுபோன்று குடியின் வெறியினால், மயக்கத்தினால் பிறர்க்குத் துன்பத்தை விளைவித்தால் என் செய்வது. என்னுடைய உயிர் அவர் கரத்தினால் மாண்டாலும் நான் அதற்குச் சளைக்கமாட்டேன். கடவுளால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவு அழிந்துபோய்விடுகின்றதே! செல்வம் சீர்குலைந்துவிடுகிறதே! இக் கட்குடியினால் பணத்தைப் பாழ்படுத்துவதைவிட அதை ஏழைகளுக்குக் கொடுத்தால் எவ்வளவு நன்மை கிடைக்கும். எவ்வளவு புண்ணியம் உண்டாகும். இவைகளைச் சற்று யோசித்துப்பாருங்கள். உங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படியாக நீங்கள் கஷ்டப்பட்டு இதுவரையில் எத்தனை பொருளீட்டி இருப்பீர்கள். அவைகளில் நீங்கள் இப்பாழுங் கள்ளுச் சாராயத்திற்குக் கொள்ளை கொடுத்த தொகை எத்தனை இருக்கும் என்பதை உங்களால் கணக்கிட வியலுமா! அந்த கணக்கு உங்களுக்கே தெரி

எத்தனை உழைத்தாலும் சிலருக்கு நன்றி இருப்பதே இல்லை. என்ன வேலை செய்தார்கள் என்கிற சொட்டைச் சொல்லையே சொல்லுகின்றார்கள். உழைத்து அலுப்புற்ற புண்ணுளியின் மனம் எவ்விதம் தான் இருக்கும்.

யாது. உங்கள் உழைப்பினுல் திரட்டிய பணத்தினுல் என்றேனும் உங்கள் மக்கள் மனைவிகளை நீங்கள் களிப்பித்திருப்பீர்களா! உங்கள் இருதயத்தில் கையை வைத்துப் பாருங்கள். அவர்களுடைய தாலியையும் அறுத்து நீங்கள் குடித்துப் பாழாக்கிவிட்ட காட்களின் கணக்குத் தொகைதான் உங்கள் கண்முன்பு தோன்றும். அவர்கள் கண்ணீர் வீணே போகாது. உங்கள் கொடுஞ் செய்கையினுல் அவர்கள் வருந்தி உயிர் இழந்தபிறகு உங்கள் அறிவழிந்து கையும் வரண்டு எவர் நோக்கினும் அலக்ஷயமாயும் துச்சமாயும் பேசி ஏசும் படியான நிலைமை உங்களை அணுகாமலிராது. அப்போது உங்களுடைய இக்காலத்திய பாலிய லீலைகள் முற்றும் அகக்கண்ணெதிரில் நாடகமாகத் தோன்றும். உங்கள் மனைவி மக்களைச்செய்த கொடுஞ் செய்கைகளும் அவர்கள் வடித்த கண்ணீரும் கூரிய வாள் போல—ஈட்டி போல—உங்கள் தேகத்தையும் மனத்தையும் குத்தியறுத்து வதை செய்யும். அவர்களுடைய உருவங்கள் அலகை ரூபமாக உங்களைக் கண்டிக்கும். அக்காலையில் வருந்துவதில் உபயோகமில்லை.

நண்பர்களே! இக்கள்ளு சாராயத்தை—நாற்றம் வீசும் அசுசியான பண்டத்தை—நீங்கள் குடிக்காதீர்கள். அதனுல் அனியாயமாகக் கெட்டுவிடாதீர்கள். எல்லாவற்றையும் சாவதானமாக யோசித்துப் பாருங்கள். நான் பட்ட, படும் கஷ்டத்தைத் தாங்காது என் புருஷனை அக்கினி சாக்ஷியாக மணந்த ஹோதாவில் நான் அவரைச் சீர்திருத்த வந்தேன். நண்பர்காள்! இத்தகைய துர்மணமுள்ள போதை தரும் வஸ்துவை விட்டு விடுங்கள்" என்று பெரியதொரு பிரஸங்கம் செய்யத் தொடங்கிவிட்டாள்.

210035

முக்தி தரக் கூடிய சன்மார்க்கங்கள் அநேகமிருக்க, மாயா விலாசமான பாச பந்தத்தில் உழன்று ஜனங்கள் தவிக்கின்றுர்கள். அதே போன்று ஸ்வதந்தரத்தைத் தரக்கூடிய அநேக வழிகளில் முக்கியமான கதரை அவமதித்து ஏளனமாகப் பேசி அடிமைத்தனத்தை அதிகரிக்கச் செய்யும் படாடோபமான வில்கு வகைகளில் ஆவல் கொண்டலைகின்றுர்கள். அவர்கள் மனம் என்று தான் திருந்துமோ ஈசா?

அங்குக் கூடியுள்ளவர்கள் திரை மறைவில் குடிக்கக்கூடியவர்க ளாகையினால் திடீரென்று மதியழிந்து சீற்றங்கொண்டு பாயாது சற்று பொறுமையை வகித்துக் கேட்கலானார்கள். ஸாவித்திரியி னுடைய ஒவ்வொரு சொல்லும் இவர்கள் மனத்தில் நன்றாகப் படத் தொடங்கியதால் அவளை எதிர்க்கவோ இம்சை செய்யவோ மனம் வரவில்லை. அவளுடைய உருக்கமான சொற்களால் இவர்கள் தடை கட்டியதுபோலானார்கள். எனினும் நாகஸாமிக்குமட்டும் தன் மனைவி தன்னைத் தேடிக்கொண்டு வந்ததோடு தான் குடிக்கவிருந்த மொந்தையை உடைத்துவிட்டாளே என்ற ஆத்திரம் பொங்குகின் றது. இவளோ காலை கெட்டியாகப் பிடித்திருக்கிறாள்; அரு கிலோ கூட்டம் நிறைந்திருக்கிறது என்ன செய்வதென்று தோன் றாது விழித்தவாறு இவள் வார்த்தையைக் கேட்கிறான், இடை இடையே உதைக்கின்றான். காலைத் திமிறுகின்றான். இன்னொரு மொந்தை கள்ளு கொண்டு வா என்று உத்தரவு போடுகிறான். இத் தனை விதமான லீலைகளுடன் நின்றான்.

கோபம் உச்ச நிலையை அடைந்துகொண்டே வருகிறது. எனி னும் இவள் வார்த்தைகளும் செவியில் பாய்ந்து சற்று ஒருவித மாறுதலை யளிக்கின்றன. இந்த நிலையில் இவள் பேசி முடிப்பதற்குள் குறும்பும் கொழுப்பும் மிகுந்த கள்ளுக்கடைக்காரன் தன் வியாபா ரத்திற்குப் பங்கம் வந்துவிடுகின்றதே என்கிற வயிற்றெரிச்சலால் எதிரில் வந்து ஒரு மொந்தை கள்ளை நாகஸாமியின் கையில் கொடுத்து ஆத்திரத்துடன், "அடி துஷ்டே! நீயா உத்தம பதி விருதை! உன் பர்த்தாவின் இச்சைப்படிக்கு நடக்கவேண்டிய தர் மத்தை கைவிட்ட நீயா நீதி உரைக்க வந்தாய்? பதியின் இஷ்டப் படி நடப்பவளல்லவா கற்புடையவள்! இந்த நீதியை மறந்து உள

மன நிம்மதிக்காகச் சற்று படுத்திருக்கும் நேரத்தில் பாழும் மனத்தில் பிரிந்த சிநேகிதையின் நினைவும் உருவமுமே தாண்டவ மாடுகின்றன. "நம்மை விட்டு விலகியவர்களை ஏன் என் மனத்தில் புகுத்துகின்றாய் சர்வேசா! அந்த நேரத்தில் உனது திவ்ய மங்கள ரூபமும் லீலா விநோதங்களும் என் மனத்தில் தோன்றி ஆனந்த மடைய அருள் செய்வாய் என்னப்பனே" என்கிறார் ஒருவர்.

றும் நீ பெண்ணு! பேயா! சிச்சீ வெளியே செல்கின்றுயா, இல்லையா! உன்னுடைய கடமையை—தருமத்தை—நீ செய்யாது வீணுக பெரிய பிரஸங்கம் செய்ய வந்துவிட்டாயா? போ வெளியில்; இல்லையேல் உன்னைத் தள்ளி விடுவேன்." என்று வெகு முடுக்காகப் பேசினுன்.

இதைக் கேட்ட ஸாவித்திரி சற்றும் சளைக்காமல் அந்த கடைக்காரனின் முன்பு வணங்கி "ஐயா! தாங்கள் கோபித்துக் கொள்வது உங்கள்வரையில் அடுக்குமேயல்லாது பிறருக்கு அடுக்காது. உங்கள் ஒருவருடைய லாபத்தை மட்டும் கோரி நீங்கள் மாடிவீடும் ஜோடி நகையும் தேடிக்கொள்வதற்கு எத்தனை ஏழைகளின் வாயில் மண்ணைப் போடுகிறீர்கள். எத்தனை ஏழைகளின் உயிரை மடிய வைக்கிறீர்கள். எத்தனை குடிகளைக் குலைக்கின்றீர்கள். இவ்விதமான தீய துறையில் தேடும் பொருள் உங்களுக்குத்தான் நிற்கும் என்று எண்ணுகிறீர்களா! வந்த வழியிலே இவ்வனியாய சொத்தெல்லாம் அழியும்படிக் கடவுள் செய்வதற்குத் தயாராகவிருக்கிறுன். அவன் சும்மா விடமாட்டான். தர்மத்தை மறக்காதீர்கள். பதியின் இச்சைப்படிக்குக் கற்புடைய நங்கையர் நடக்க வேண்டுவது கடமையே. எனினும் அந்த பதி தீய வழியில் சென்றுல் அவனை நல்வழியில் திருத்துவதற்கும் அந்த பத்தினிக்கு உரிமை உண்டு என்ற நீதியை மறக்காதீர். ஐயா! தாங்கள் அக்கிரமமான கள்ளை விற்று அனியாய வழியில் பணத்தைத் தேடித் தடபுடலாக வாழ்க்கை நடத்துவதினுல் உமக்கு நன்மை, தீமை; பெண்பால், ஆண்பால்; ஏழை, பரதேசி என்ற வித்யாசமே அறியக்கூடாத நிலைமையில் ஆய்விட்டது. என் வயிறெரிவதுபோல உமது மனைவியின் வயிறு என்றுவது எரிந்து வருந்தி இருப்பாளேயானுல் குடி

தற் செயலாகப் பிரிந்த சிநேகிதர்கள் சந்திக்க நேருங் காலத்தில் அவர்கள் முகத்தில் பழைய சிநேக ஜ்வலிப்பும், அன்பு மயமான புன்னகையும் ஆவல் மிகுந்த பார்வையும் எக்காரணம் பற்றியோ அற்றுப் போய் வேறு விதமாகக் காணப்படுகின்றது. அத் தருணம் பலவந்தமாக நகைப்பை வருவித்துக்கொண்டு சிரமப் பட்டுப் பேச யத்தனிக்கின்றுர்கள். ஆ! இதென்ன புதுமையோ!

கெடுக்கும் கள்ளை விற்பதன் பயனை யறிவீர். குடிகாரர்களின் குடும்பம் சீர் குலைவதையும் அறிவீர். அவர்களின் பணத்தைத் தாங்கள் பெற்றுக்கொண்டு அவர்களுக்குப் பயித்தியத்தையும் வெறிபிடித்த குணத்தையும் முரட்டுத்தனத்தையும் நீர் தானமாக அளிக்கும் தயாளத்தன்மையையும்—கருணை பொருந்திய செய்கையையும்—அறிவீர். நீர் குடியை வூற்றி ஏழைக் குடிகளைக் கெடுத்து அவற்றின் வருவாயைக் கொண்டு ஜில்லென்று காத்து வாங்கிக்கொண்டு மக்கள் மனைவியுடன் முக்காலமும் போக பாக்கியத்துடன் உண்டு உறங்கும் பரமாநந்த சாகரத்திலிருக்கிறீரே, ஏழைகளின் வயிற்றெரிச்சலை நீர் எங்ஙனமய்யா அறியப்போகிறீர். அனேக ஏழைக் குடும்பங்கள் கஷ்டப்பட்டு வாடி அவர்களுடைய பணங்கள் எல்லாம் உம்மிடம் சேராவிடில் நீர் இந்த மாடிவீட்டையும் மற்ற சுகானுபவங்களையும் எங்கே ஐயா காணப்போகிறீர்? அவர்களுடைய குடும்பத்தில் அல்லும் பகலும் அனவரதமும் கண்ணும் கண்ணீருமாகத் துன்பப்படும் மனிதர்களின் கண்ணீர் உம்மைக் கூரிய வாள்போன்று தாக்கிவிடாதா! பின்னும் அவர்கள் வயிறெரியும் எரிச்சல் உம்மையும் எரித்து விடாதா! அவர்கள் வீட்டுக் குழந்தைகள் உணவின்றி பசி, பசி என்று கதறுகின்ற கதறல் உம்மையும் உமது மக்களையும் வெறுமனே விட்டுவிடுமா! அவர்களைப் போலக் கதறப் பதற அடித்து விடும் என்பதை மறக்காதீர். ஐயா! இப்படி உலக முழுதும் பசிப் பிணியாலும் பலவிதத் துன்பங்களாலும் தம்மையே மறந்து அறிவிழந்து இடர்க்கடலுள் மூழ்கி உழல நேரிடுதற்குக் காரணம் கட்குடி யென்பதைப் பேதையாகிய யான், உமக்குப் புத்தி கூற எனக்கு நாணத்தை யுண்டாக்குகின்றதே! நீர் மீசை முளைத்த ஆண் பிள்ளையாகப் பிறந்ததன் பயன் கட்குடியை விருத்தி செய்வது ஒன்று தானே! ஏனையா இவ்விதமான ஈனத்தொழிலை இன்பமுடன் நடத்தி எல்லோரையும் வதைக்கின்றீர். என்னைப்போன்ற இன்னும் எத்தனை மங்கைகளின் சாபம் உம்மைத் தொடர்கின்

சிலரைப் பிடித்துக் கொண்ட வால்கள் அவர்களை விட்டுப் போவதே இல்லை. எந்த இடத்திற்கும் தொடர்ந்து வருகின்றன. இவர்களைப் பின் பற்றுவது தான் அவர்களுக்கு வேலையோ என்னவோ?

றதோ! எலியும், பாச்சையும் இன்னும் மற்ற பூச்சி புட்டுகளும் விழுந்து இறந்து கிடக்கும் ஆபாஸங்களை உமது மக்களை நீர் குடிக்கும் படியாகச் செய்வீரா! அவர்களைப் போல ஊர் குடி மக்களும் உங்களுடைய சகோதரரல்லவா! அந்த இரக்கமும் அறிவும் உம்மை விட்டு எங்கே ஓடி ஒளிந்துவிட்டது? இப்போது உம்மிடத்தில் தாண்டவமாடும் பணத்தை நீர் பணமென்று நினைக்கிறீர். இல்லை; இல்லை, அத்தனையும் பிணமே என்று நான் துணிபுடன் கூறுவேன். பிணத்தின் கதி என்ன வித முடிவோ, அதுபோன்று தான் உமது பணத்தின் முடிவும் நேரும். வீணாக இறுமாந்துத் திரிய வேண்டாம்" என்று ஸாவித்திரி வெகு வணக்கத்துடனும் சாந்தத்துடனும் சற்றும் உரத்த குரலைக் காட்டாது வார்த்தைகளை மட்டும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல வெகு ஒழுங்காக ஏற்றிக் கூறினாள்.

இவ்வாறு இவள் கூறி முடிப்பதற்குள் கள்ளுக் கடைக்காரப் புண்ணியவானுக்குக் கோபம் பொங்கிவிட்டது. கள் குடியனைத் தோற்கடிக்கும் வண்ணம் கண்கள் சிவந்துவிட்டன; சீற்றத்தின் வேகத்தினால் மீசை துடி துடிக்கின்றது. அத்தகைய நிலைமையில் அவன் ஸாவித்திரியை நோக்கி "அடி, துஷ்டே! இத்தனை நேரம் நான் உனது அதிகப் பிரஸங்கத்தை ஆவலுடன் கேட்கவேண்டும் என்று வாளா விருந்ததாக நினைக்காதே. உன்னுடைய தலைத் திமிர் இன்னும் எத்தனை தூரத்தில் சென்று நிற்கின்றது பார்ப்போம் என்று தான் மௌனம் சாதித்தேன். ஒரு பெட்டைச் சிறுக்கியாகிய உனக்கு இத்தனை அகம்பாவமா! சீச்சீ! வெளியில் செல்; இல்லையேல் தள்ளிக்கொண்டுதான் செல்லச் செய்குவேன்," என்றான்.

ஸாவித்திரி:—ஐயா! இத்தனை தர்மார்த்தமான மகிமை பொருந்திய காரியங்களைச் செய்யும் நீர் என்னைப் பிடித்துத் தள்ளு

சொந்த உடன்பிறந்த சகோதரிகள் இருவர் மனமொத்துப் பேசலாகாதாம். இவ்வாறு அவர்களோடு பிறந்த சகோதரனே கண்டிக்கின்றானாம். இதென்ன கலியின் வேடிக்கையப்பா?

வது ஒரு வியப்பா! அதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது. என்னை கழுத்தைப் பிடித்துத் தள்ளிய ஒரு குற்றத்தில் நீர் சிக்கிக் கொண்டு அப்பொழுதேனும் ஊரைக் கெடுக்கும் உபயோகமற்ற குடியை ஒழிப்பீர் என்று நான் எதிர் பார்க்கிறேன். என் பிராண நாதரை நான் சீர்திருத்தி அழைத்துச் செல்வது என் கடமை; ஆகையினால் நான் இங்கிருந்து செல்லமாட்டேன். அவருடன் கூடத்தான் செல்வேன். நான் மறியல் செய்ய வரவில்லை. ஆகை யினால் என் காரியத்தின் ஜெயத்தை நான் நாடுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட கடைக்காரனுக்குக் கோபம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. அவன் தன்னுடைய சட்டையின் உள் பக்கம் பதித்துள்ள பையில் வைத்திருந்த கைத் துப்பாக்கியைச் சரே லென்று எடுத்து ஸாவித்திரியைச் சுட்டுவிட்டான். கள்ளுக் கடைக் காரன் மதியின் விசேஷம் முடிவில் இதுதான். அவ்வாறு அவன் சுட்டவுடன் அருகிலிருந்த எல்லோரும் தம்பித்து நடுநடுங்கி "ஹா! ஹா! கொலை! கொலை!! அனியாயப் படுகொலை! ஓர் பெண்மணி மாண்டாள்; மாண்டாள்" என்று கூக்குரலிட்டவாறு நின்று விட்டார்கள். ஸாவித்திரி வீறிட்டவண்ணம் "ஹா! என்பிராணநாதா! என் பிராணகாந்தா! என்னரிய சகோதரர்களே! ஆத்ம மித்திரர் களே!" என்று கத்தியவாறு வெட்டிச் சாய்த்த மரம் போல விழுந்து விட்டாள்.

விவாகத்தில் சாப்பாட்டுச் சண்டை, பலகாரச் சண்டை, காபி டீ வகைச் சண்டை இவைகளெல்லாம் இருப்பதோடு பிரத்யேகமாக மோட்டார் அனுப்பி உபசரிக்க வில்லை என்று புதியசண்டை கிளம்பு கின்றது. இன்னும் எத்தனைவித சண்டைகள்தாம் கிளம்புமோ!

சில புண்ணியாத்மாக்கள் தங்கள் மனைவியைத் தவிர வேறு சொந்த மனிதர்கள் வந்தாலுங் கூட முகங் கடுத்துக் கோபம் சீறி யெழுந்து இவர்கள் எப்பொழுது தொலைவார்களென்று கூசாமல் கூறுகின்றார்கள். அடடா! என்ன அருமையான குணம்!

13-வது அதிகாரம்

தேச சேவையின் ஆசைப் பெருக்கு

திலோத்தமாவின் புருஷன் தன்னை மீறிய கோபத்தினால் நிரபராதியான அலைராஜாவின் மீது சந்தேகங் கொண்டு அவனை வழி மறித்துக் கத்தியால் குத்தத் தீர்மானித்த தருணம், விவரம் ஒன்று மறியாத அலைராஜா திடுக்கிட்டு, "இதென்ன விபரீதம்! இவ்விதம் ஏன் நம்மைக் குத்த வேண்டும். நாம் என்ன தீங்கு இழைத்தோம் ஒன்று மில்லையே! இவருடைய வழிக்கு நான் எக்காலத்திலும் எக் காரணம் பற்றியும் செல்லவில்லையே! இதென்ன வேடிக்கை! ஹா, கடவுளே! நான் என் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்வதற்காகத் தான் தேக மெடுத்தேன் என்று அகமகிழ்ந்தேனே! என் எண்ணத்தில் மண்ணைப் போடுவதற்கு முடிவு செய்துவிட்டாயே! நான் என் மனத்திலுள்ள ஆவல் படிக்கு தேச ஊழியம் செய்து வெற்றி மாலை சூடுவது, அன்றி வீரச் சொர்க்கம் புகுவது என்று நினைத்தவாறு நடவாது அனியாயமாய், அகாரணமாய், அனாவசியமாய், நிரபராதியாய் என்னுயிரை மாய்த்துவிடத் தருணம் கிட்டிவிட்டதே! ஹா! என்ன செய்வேன்? ஒன்று நினைக்கின் அது ஒழிந்து வேறொன்று நடக்கின்றதே!" என்று நினைத்து கண்ணீர் உதிர்த்தவாறு, "ஐயா! நான் உமக்கென்ன தீமை செய்தேன். என்னுடைய வாழ் நாளில் நான் ஒரு எறும்புக்கும் என் மனத்தால் கேடு நினைத்

எப்போதும் அன்னியர் வீட்டில் நாட்டாமை செலுத்தி வந்த பெருச்சாளிகள் தங்களுக்கு ஒரு சமயம் அதிகாரம் குறைந்து விட்ட காலையில்—அவ் வீட்டு மனிதர் விழித்துக் கொண்ட போது—வெறுமனே உட்கார்ந்திருக்கையில் அவ் வீட்டிற்கு வேண்டியவர்களை யெல்லாம் திட்டுகின்றன. அவர்கள் வீட்டில் அன்னியர் நாட்டாமை செலுத்தினால் எப்படி யிருக்கும்?

தவனல்லையே! என்னுடைய மனச் சாக்ஷி யறிய நான் உமக்கு ஒரு விதமான கெடுதலும் செய்யவில்லையே! மனத்திலும் நினைக்க வில்லையே! என்றும் நினைக்கப் போகிறவனும் அல்லவே! அங்ஙன மிருக்க என்னை திடீரென்று வழி மறித்துக் கத்தியால் குத்த வருகிறீரே? ஐயா! நான் தேச சேவகன். என்னால் கூடிய வரை யில் என் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்துப் பின் என்னுயிர் நீங்கினால் நான் சந்தோஷமாக இறக்கத் தயாராக உள்ளேன். என் மீது தங்களுக்குத் திடீரென்று இத்தகைய எண்ணம் உதிக்கக் காரணம் யாது? ஐயா! உமக்கு நான் என்னை அறியாத விதத்தில் ஏதேனும் தீங்கு செய்திருப்பேனே யாகில் அதை எடுத்துக் கூறும். அதற்குத் தகுந்தவாறு நான் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு உம்மால் விதிக்கப்பட்ட தண்டனையை அடையத் தயாராக விருக்கி றேன். ஐயா! தயவுசெய்து பொறுமையை இழக்காமல் கருணையைக் காட்டும்'' என்று கெஞ்சியவாறு திலோத்தமாவின் புருஷனின் கரத்தைப் பற்றிக்கொண்டான்.

திலோத்தமாவின் புருஷன் ஆத்திரத்துடன் பேசத் தொடங்கி "அடேய்! நீ ஒன்றும் அறியாதவன் போல—ருத்திராக்ஷப் பூனை யைப் போல—பேசுகின்றாயே! நீயா எனக்குத் தீங்கிழைக்காதவன். நீயா எனக்குத் துரோகம் செய்யாதவன்? அடேய் சண்டாளா! தேச சேவை செய்வதாக வாய்ப் பறை சாற்றிக்கொண்டே நீ அன் னிய மாதர்களை எல்லாம் அனியாயம் செய்வதை நான் அறியமாட் டேன்என்று நினைக்கின்றாயா! என் மனைவியை மோசம் செய்து எனக் குத் துரோகம் இழைக்கும் கர்ம சண்டாளன் அல்லவா நீ! உன் செய்கைக்கு என்னை மன்னிக்கும்படியாகக் கேட்கிறாயே! வெட்க மில்லை! என்னுடைய ஆத்திரத்தில் உன்னை நான் அதம் செய்து விட

பெற்ற அன்னை இறந்து விட்டாலும், தந்தையும் இன்னும் மற்றோரும் பெற்ற குழந்தைகளை அன்பாக வளர்த்து உபசரித்தது போக மூன்றாவதாக மூளைத்த மனிதர்கள் அக் குழந்தைகளை அதிகாரஞ் செய்து விசேஷ நாட்களி லும் ஆபரணங்களைக் கொடாது அழ வைப்பதோடு தாமே அவர்களை வளர்த்த தாகப் பிறரிடம் வெட்க மின்றி பறை சாற்றுகின்றார்கள், இதென்ன அநியாயம்!

வும் தயாராக விருக்கிறேன். இவ்விதம் வேஷம் போட்டுப் பிழைப்பதை விட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விடலாகுமே! ஏன் இவ்வித மானங் கெட்டு ஜம்பமாக வாழவேண்டும்?" என்று இவன் சொல்கிற வார்த்தையைக் கேட்டதும் துரைராஜாவின் உயிரே நீங்கி விடும் போலாய் விட்டது. அவன் இம்மொழியாகிய அக்கினியினால் வெதும்பிவிட்டான். பேரிடி தன் தலைமீது விழுந்தது போலான அடி துடிப்பு உண்டாகி விட்டதால் அவன் தேகம் பதற, சிந்தை சிதறக் கண்ணீர் உதிர "ஹா! கடவுளே! இதுவும் உன் சோதனையா! ஒரு பாபமும் அறியாத நிரபராதி நான் என்பதை நீ யறியாயா! ஐயா! என்னை நீங்கள் வெட்ட நினைத்ததை நான் தடுத்தது பெரும் தப்பிதம் என்று இப்போது நினைக்கிறேன். நீர் ஒரே வீச்சாக வெட்டி இருந்தால் இந்த கர்ண கொடூரமான மொழியைக் காதால் கேட்காது உயிர் துறந்து நிம்மதி படைந்திருப்பேன். என் குல தெய்வத்தின்மீது ஆணையாக நான் ஒருவித தீங்கும் இழைத்தவனல்லன். தங்கள் தேவியாரை நான் எனது உடன் பிறந்த சோதரி என்றும், ஈன்ற அன்னை என்றும் நினைத்துப் போற்றி வருகிறேன் என்பதை நான் எந்த கோயிலில் சத்தியம் செய்யச் சொல்லினும் செய்வதற்குத் தயாராக விருக்கிறேன். என்மீது இத்தகைய அடாப் பழி சாரும் என்று நான் கனவிலும் கருதவில்லை. என் போதாக் காலப் பயனால் இவ்வித வார்த்தையைக் கேட்க விதியமைந்தது. சாக்ஷாத் லோக மாதாவாகிய ஜானகியின் சரணாரவிந்தத்தை யன்றி முகத்தையும் கண்ணெடுத்துப் பாரா நின்ற இளைய பெருமானை—லக்ஷ்மணரை—நோக்கி எல்லா மறிந்த லோக மாதாவே இவ்விதமான பழியைச் சுமத்துகையில் கேவலம் நரஜந்துவாகிய என்மீது பழி சாருவதற்கு வியப்பென்ன விருக்கிறது. ஐயா! நான் எனது குல தெய்வத்தின் மீது ஆணையாக ஒரு தீங்கும் யாருக்கும்* மனத்தினால் கூட எண்ணியவனல்ல என்பதைப் பன்

சில கலகக்காரக் குண்டுணிகள் தமக்குத் தான் அதிகார மிருக்கிறதென்றெண்ணி ஒரு பெண்ணினுடைய தந்தைக்கு ஒரு விதத்திலும், கணவனுக்கு ஒரு விதத்திலும் கலகத் தீயை மூட்டி அப் பெண்ணின் மனத்தை நோகச் செய்கிறார்கள். இவ்விரு புண்ணிய கைங்கரியம் செய்வதில் அவர்கள் வாரிக் கொள்ளும் பலந்தா னென்னவோ!

முறை கூறுவதைத் தவிர வேறு எதுவும் நான் கூறத் தயாராகவில்லை. நாங்கள் சத்யாக்ரகிகள். சாந்த அவதாரமாகிய காந்தி மகாத்மாவின் கருணை நிழலைப் பின் பற்றக் கூடிய தேச ஊழியர்கள். ஆகையினால் நீர் என்னை வெட்டினாலும் சம்மதமே; அல்லது இன்னும் என்ன செய்தாலும் சரியே! அனியாயமான படாப் பழியால் மாண்டு போகிறேனே என்பது ஒன்று தான் மனத்தில் பாதிக்கின்றது. பாரத மாதாவின் மீது பாரத்தைச் செலுத்தி இதோ நான் தயாராக நிற்கின்றேன். என்னை வெட்டி வீழ்த்தும். என்னுயிர் இவ்வுடலை விட்டுப் போகப்போகின்றதே யன்றி என்றும் அழியாத ஆன்மா மீண்டும் வேறு கூட்டில் அடைபட்டு இம் மண்ணிலேயே பிறந்து பாரத நாட்டின் தொண்டை யாற்றும் என்ற நம்பிக்கையை நான் இழந்தவனல்லேன். ஐயா! உலகம் இத்தகையது. மனிதரின் குணாகுணங்கள் இத்தன்மையன என்ற விவரத்தை நான் இப்போதே தெரிந்துகொண்டேன். மகா உத்தமியும், கற்பரசியுமாகிய என் சகோதரி திலோத்தமாவின் மீது பழி சுமத்துகின்றவர்களைக் கடவுள் சும்மா விடமாட்டார். அந்தம்மாளைக் கற்பழித்ததாக ஓர் அனியாயப் பழியை ஏற்றுவிட்ட பிறகு நான் இனி இவ்வுலகில் ஒரு வினாடி இருப்பதற்கும் யோக்யமானவனில்லை. என் மனமறிய நான் இப் பிறப்பில் எந்த உயிருக்கும் தீங்கிழைக்கவில்லை.

“என் செயலாவ தியாதொன்று மில்லை இனித் தெய்வமே
உன் செயலே யென்றுணரப்பெற்றே னிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனவந்து மூண்டதுவே”

என்று பட்டினத்தடிகள் பாடியிருக்கும் பாடலை இப்போது என்னுள்ளம் நினைக்கின்றது. முற்பவத்தில் நான் செய்த பாபமே இப்பிறவியில் வந்து தாக்குகின்றதோ என்னவோ! ஐயா! அனியாயப்

சிலருக்கு எப்போதும் முகமும் இறக்கம்; அவர்கள் பேசுவதும் ஈனஸ்வரம் செய்கையோ சுருசுருப்பற்றது; பார்வையோ நோயாளிப் போன்றது; இதற்குக் காரணம் கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

பழி பூண்டு இவ்வவனியில் இப்பூத உடலைச் சுமந்து வாழ்வதைவிட என்னுயிர் நீங்குவதில் நான் மிக்க சந்தோஷ மடைகின்றேன். ஐயா! நான் உயிர் நீத்துவிடுவதில் சற்றும் பின்னடையவில்லை. என்னுயிர் நீங்கிய பிறகு அந்த உத்தமியின்மீது இத்தகைய அடாப் பழியைச் சுமத்தி அவ்வம்மையையும் பரலோகத்திற்கு அனுப்பி விடாதீர்கள். தேச உணர்ச்சியற்ற எத்தனையோ பெண்மணிகளுக்கு உணர்ச்சியுண்டாக்கி அவர்களை தேச சேவையில் ஈடுபடச்செய்த மாதரசியவர்கள். அவர்களால் இன்னும் இத்தாய் நாட்டிற்கு அனேக தொண்டுகள் ஆற்றவேண்டி இருக்கின்றன. சந்தேகம் என்ற பைசாசத்தினால் கட்டுண்ட நீர் ஒரு உயிரைக் கொலை செய்தது போதும். மறு உயிரை வாங்கவேண்டாம். சந்தேகங் கொண்ட உமதுள்ளத்திற்கு நான் இப்போது சொல்வது முற்றும் வித்யாசமாகத் தான் படும்; ஆகையினால் அதைக் கூட நான் சொல்வதற்கில்லை. ஐயா! இந்த சந்தேகப் பிசாசு பிடித்தவர்கள் யாரும் உலகத்தில் உருப்படவே மாட்டார்கள். இந்த சந்தேகமும் விபரீதமும் என்னுயிருடன் விட்டு நீங்கட்டும். இனி இம்மாதிரி செய்கையை யாரிடமும் காட்டாதீர்கள். இக்கத்தியை ஓங்கி உம்முடைய வேலையை முடித்துவிடும். ஐயா! எனது கடைசி காலத்தில் நான் செய்யும் பிரார்த்தனைகள் இரண்டுள. அவைகளைச் செய்யும் வரையில் எனக்கு அவகாசம் அளித்தால் போதும்" என்று கூறி மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

"ஏ கருணா மூர்த்தே! கஞ்ச லோசனா! என்னை இத்தாய் நாட்டின் தொண்டு செய்யும் பொருட்டாகப் பிறப்பித்தாய். அத்தொண்டு பூர்த்தியாகு முன்னர் என்னை உன்னடியில் சேர்த்துக் கொள்வது பற்றி நான் வருந்தவில்லை. எனினும் நாட்டிற்காக நான் உழைத்து அதன் நிமித்தம் வீரச் சொர்க்கம் அடைந்திருப்பின் மிக்க சந்தோஷ மடைந்திருப்பேன். என்னுடைய

சிலர் விவாக வீட்டிற்கு வந்தால் அங்கு தம்பதிகளைக் கண்டு ஆனந்திப்போமென்கிற நினைவேயில்லை. அவர்களது எண்ணமெல்லாம், எந்தப் பண்டங்களை சுருட்டிக் கொண்டு போகலா மென்பதிலேயே நாட்டம்; அவ்வாறே அகப்பட்டதை அமுக்கிக் கொண்டே போய்விடுகிறார்கள்.

வானாள் ஓர் பழியைத் தாங்கிக் கழிவதை நினைத்துத் தான் என் உள்ளம் வருந்துகின்றது. பரம்பொருளே! என்னுடைய ஆவி இவ்வுடலை விட்டு அகாரணமாய், அனியாயமாய் நீங்கி விடினும் எனது தூய்மையான நிலைமையை—பரிசுத்தமான தன்மையை—நீ அறியாமலில்லை. எனது மறு பிறவியிலாவது எனது தாய் நாட்டின் தொண்டை என் மனம் சலிக்க ஆற்றி அதன் பலனை அடைந்து பின்னர் என்னுயிர் உன்னடியில் சேரும்படியான கிருபை செய்ய வேண்டும். என்னப்பனே! ஜகத் ரக்ஷகா! நான் இம்மையில் என் மன மறிய ஒரு பாபமும் செய்யவில்லை. என்னையறியாது ஏதேனும் பாபம் செய்திருந்தால் அவைகளை க்ஷமித்து என்னை ஆட்கொண் டருள வேண்டும் ஐயனே! இத்தாய் நாட்டின் மற்றைய தொண்டர் களுக்கும், மகாத்மா காந்தியடிகளுக்கும், தேச சேவிகளுக்கும் எனக்குற்ற பழியைப் போன்று பழி அணுக விடாது த்ருடகாத்ர சரீரத்தையும், விடா முயற்சியையும், தீர்க்க ஆயுளையும், சலிக்காத ஊக்கத்தையும், அழியாத கீர்த்தியையும், அளித்துக் காத்து அவர்கள் தொண்டிற்கு மன மிரங்கி நாட்டின் ஜயத்தை அருளும் படியாக வேண்டுகிறேன்.

என் கண்மணி! ஜெயலக்ஷ்மீ! உன்னை அக்னி சாக்ஷியாக மணந் தேன். நீ என் சொல்படிக்கு நடவாமையினால் என் மனம் நொந்து உன்னை நான் கண்ணெடுத்தும் பாராது உனது தப்பிதத்தை நீயே உணரும் படியாகச் செய்து அதனால் உன் மதி திருந்தும் வழியைச் செய்தேன். உனக்கு நற்புத்தி புகட்டிய உத்தமியின் உபதேசத் தினால் நீ என்னை இதற்கு முன் வருந்தச் செய்தவைகள் மறைந்து என் மனம் இரட்டிப்புச் சந்தோஷத்தை அடைந்தது. என் கண்ணே! என் காதலி! நான் உன்னைத் திருமணம் செய்து கொண்ட பலனைச் சமீபத்திலேயே அடைந்தும் அந்த ஆநந்தத்தை முற்றும் அடைவதற்குள் நான் அபாக்யவானாக மடிகின்றேன். என் கற்பகத்

சில தந்திரிகள் வீட்டுத் தலைவர்களை நன்றாகத் தம் வயப் படுத்திக் கொண்டு தங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் அவர்கள் மூலம் தாராள மாகக் கறந்து கொண்டு செல்கின்றார்கள். இத்தகையோர் செய்கைகள் திருட்டு மோசம் முதலியவற்றில் பதிவாவதில்லை.

தருவே! என்னாருயிர்த் துணைவியே! என் கண்ணே! நான் இறந்து விட்டபிறகு அச் செய்தியைக் கேட்ட நீ துடிப்பாயோ! மனம் தத்தளித்துத் தவிப்பாயோ! கண்ணீர் வடித்துக் கலங்குவாயோ! என்னை எண்ணி ஏங்குவாயோ! உலகத்தை வெறுத்து உயிர் நீப்பாயோ! மனந் தாங்காது மடிய நினைப்பாயோ! கணவன் கை விட்டான் என்று ஏசிப் பேசி வருந்துவாயோ! ஹா! என் செய்வேன்? நான் எத்தனையோ விதத்தில் மனக் கோட்டை கட்டி மண்ணாகி விட்டேனே! ஜயலக்ஷ்மி! நீயும் தேசத்திற்கே தேகத்தை அர்ப்பணம் செய்து ஒத்துழைத்து ஜெயமடைய ஆசித்தேனே! என் ஆசையில் மோசம் வந்து சூழ்ந்ததே! கண்ணே! கடைசியாக உன்னைக் கண்ணால் பாராமல் உயிர் விடக் கூடிய காலம் எனக்குச் சற்றும் கனவிலும் எதிர்பாராது வந்து விட்டதே! என் இன்னுயிர்க் காதலி! நான் உன் முகக் கண்ணை விட்டு மறைவேனே யல்லாது அகக் கண்ணில் அகலாது வீற்றிருப்பேன். நீ தேச சேவையில் பின்னடையாதே. நீயும் நானும் ஒருயிராக உழைக்க எண்ணினோம்.

என்னுயிரும் நின்னுயிரும் என்ஞான்றும் ஒன்றெனவே
உன்னுநிலை எங்கே ஒளித்தது கோல்?—பன்னுங்கால்
யான்வருந்த நீ வருத்தல் ஏயுமோ? ஒன்றென்னின்
தேன்வருந்தும் இன்மொழியாய்! தேர்

—காதற் கவிதை.

என் துர்ப்பாக்யத்தினால் நான் உன்னைப் பிரிகின்றேன். என் கண்மணீ! என் காதல் கிளிமணீ! என்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்து வெற்றி மாலை சூடிக் கொள். என் விருப்பப்படிக்கு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா ஜனன பூமியாகிய சிறைக் கோட்டத்தில் சென்று ஜெயம் பெறு. எக் காரணம் பற்றியும் தேச பக்தியில் பின்னடையாதே. நான் கடைசியாக உனக்குக் கூறவேண்டுவது இது தான். கடவுளே! என் மனைவிக்கு மாறாத தேச பக்தியை

நமக்குப் பணம் கொடுக்க வேண்டியவர்களைக் கேட்பதற்கோ அவர்களின் நிலைமையைக்காண வாயெழுவதில்லை. நாம் கொடுக்க வேண்டியவர்களோ நிமிடத்திற்கு நிமிடம் தாக்ஷண்யமின்றிக் கேட்கின்றார்கள். இந்த தர்ம சங்கடத்திற்கு என் செய்வது?

அளித்துக் காப்பாய். சலிக்காத ஊக்கத்தையும், என்னுடைய நினைவினால் சோர்ந்து விடாத சக்தியையும் அளித்துக் காப்பாய் என்னப்பனே!'' என்று கூறி திலோத்தமாவின் புருடனை நோக்கி "ஐயா! என் பிரார்த்தனைகள் முடிந்தன. உங்கள் வேலையைத் தொடங்கு முன் உங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறேன். என்னருமைக் கண்மணி ஜெயலக்ஷ்மியிடத்தில் நான் இப்போது தெரிவித்த விஷயங்களைத் தெரிவித்துவிட வேண்டுகிறேன். நான் சந்தோஷமாக உயிர் விட்டதாகக் கூறவும். என் கண்மணியின் உள்ளம் கலங்காது மற்ற ஸ்திரீகளுடன் தேச சேவையைச் செய்யச் சொல்லியதாகத் தெரிவிக்கவும். நான் என் மனைவிக்குக் கூறவேண்டிய வற்றைத் தாங்களே கூறி விடுங்கள். அவளைக் கலங்கவிடாது நீங்களிருவரும் காப்பாற்றுங்கள். சந்தேகப் பேய் என்னைப் பிடிக்கவில்லை. ஆகையினால் ஐயா! என் மனைவியை உங்கள் மனைவியினிடத்திலேயே ஒப்புவித்தேன். என் கண்ணும் சந்தேகப் பேய் பிடித்தவளன்று. அவளைக் கை விடாதீர்கள். இனி உமது கத்தியை எடுக்கலாம்; தாமதம் வேண்டாம்.'' என்று கண்ணில் நீர் வடிய மனம் உருகக் கூறினான்.

இது கேட்ட திலோத்தமாவின் புருஷனின் மனம் அவனை அறியாது ஒரு விதமான நெகிழ்ச்சியை அடையத் துவங்கியது. துரை ராஜாவின் பிரார்த்தனைகளைக் கேட்க ஆரம்பித்தது முதல் அவன் கூறிய ஒவ்வொரு வாக்கியமும் இவன் இதயத்தில் ஓர் விதமான இரக்கமான உணர்ச்சியை அளித்துக் கொண்டே வந்தது. துரைராஜா தன் தர்ம பத்தினிக்காக உரைத்த சொற்களால் இவன் மனம் உண்மையில் இவனை மீறி இரக்க முற்று கசிந்துக் கண்ணீர் உதிரத் தொடங்கியது. துரைராஜா தான் மனமுருகிக் கூறியது மன்னியில், தன்னுடனேயே நேரில் தெரிவித்த விஷயத்தைக் கேட்டு முன்னிருந்ததை விடப் பன்மடங்கு அதிகரித்த விசனமும் மனச் சோர்வும் உண்டாகி அவன் முதலில் வருகையிலிருந்த மனத்

சிலருக்கு எவ்வளவு நேரமானாலும் சாப்பிடுவதற்கு மனமே வருவதில்லை. பட்டினி அவர்களுக்கு உடன் பிறப்பு போலும். இவர்களால் மற்றவர்கள் பசியோடு வாட நேருகின்றது.

திற்கு நேர் மாறாக ஆய்விட்டதால் அதற்கு மேல் அவனால் சகிக்கக் கூடாமல் கண்ணீர் பொங்கி வழியத் தொண்டையைத் தூக்க மடைக்கத் தன்னையே தான் நொந்துகொண்டு மனம் வெறுத்துத் தன் கையிலிருந்த கத்தியை வீசி எறிந்துவிட்டு துரைராஜாவை இறுகத்தழுவிக்கொண்டு, "ஹா! என்னப்பனே! துரைராஜா! காந்தியடிகளின் பெருமையையும், அவருடைய தொண்டர்களின் மகிமையையும், காங்கிரஸின் அருமையையும், அல்ப மதியுடைய சந்தேகப் பூண்டாகிய என் சிறுமையையும் நன்றாக உணர்ந்தேன்; உணர்ந்தேன். என் நண்பா! துரைராஜா! சாந்த ஸ்வரூபியாகிய காந்தியடிகளின் சிறப்பை அறியாது நான் திடீரென்று படுகுழியில்—பாபப் புதரில், ரௌரவாதி நரகில்—வீழ்ந்துழலத் துணிந்துவிட்டேன். அத்தகைய கொடிய செய்கையிலிருந்து என்னைக் கரை யேற்றிய உனது சாந்தத்தை எண்ண என் மனம் பொங்கிப் பூரிக்கின்றது. உலகத்திற்கே உழைக்க தேகமெடுத்துள்ள உன்னை நான் என் பாவி கரத்தினால் வெட்டி வீழ்த்த வந்தேனே! ஐயோ! என்ன அக்ரமம்! என்ன மூடமதி! என்ன அறியாமை! உன்னுடைய மகிமையறியாது, உன் கண்ணியம் தெரியாது, உனது உழைப்பை உணராது, உங்களிருவரின் காதல் திறத்தை யறியாது உன்னை வெட்ட நினைத்த என்னையல்லவா அக்கத்திக்கு இரையாக்கவேண்டும். உன் மீது சந்தேகங்கொண்ட மனத்தையல்லவா துண்டுசெய்யவேண்டும். உன்னைத் தாறுமாறாகத் திட்டிய நாவையன்றோ சேதிக்கவேண்டும். உன்னை வழிமறித்து, நிரபராதியாகிய உன்னை நோக்கிக் கத்தியை வீசிக்காட்டிய இக்கரத்தை—இச்சண்டாள கரத்தை—பல்லவோ துண்டாக்கவேண்டும். என்னப்பனே! என் நண்பா! உன்னுடைய மாசற்ற தூய மனத்தின் போக்கை அறியாது நான் நாசமடைந்தேன். உனது துல்லியமான இதயத்தின் தன்மையை உனது சொல்லே எனக்கு விளக்கிக் காட்டிவிட்டது. உன் பரிசுத்தத் தன்மையை நான் உணர்ந்து அவ்வழியில் நானும் ஈடுபட்டு, அத் துறையில் உன்னுடன் தேசத்திற்கு ஒத்துழைக்கும் பொருட்டா

தாமாக எழுதத் திறனில்லாவிடினும் ஒருவர் சொல்லும் விஷயத்தை எழுதுவதற்குக்கூட சிலருக்குக் கஷ்டமாயிருக்கின்றது. கற்பனா சக்தியினால் ஓயாமல் எழுதுகிறவர்களுக்கு எவ்வளவு சிரமமிருக்கும்?

கவே எனக்கு இத்தகைய துன்மதியை—தீய குணத்தை, நன்றி கெட்ட நிலைமையை, சண்டாளச் செய்கையில் மதி நாட்டத்தை—கடவுள் முதலில் அளித்தார் என்று இப்போது நான் நினைக்கிறேன். துரைராஜா! நீ உன் மனைவியின்மாட்டுக் கொண்டுள்ள அன்பையும் சேதித்து, உன்னையும் இவ்வுலகத்தை விட்டகலச் செய்ய எண்ணிய கர்மசண்டாளனாகிய என்னை மன்னிப்பாயா! ஹா! நான் செய்ய விருந்த கொடுஞ் செயலுக்கு மன்னிப்பதாவது. மன்னிப்புத்தான் கேட்பதாவது. இல்லை; இல்லை. மகா பாதகனாகிய என்னை நீ மன்னித்தலே முடியாது. மகாலக்ஷ்மி போன்ற உன் மனைவியை நீ உன்னுடன் ஒத்துழைக்கத் திருப்பிய மகிமை என்ன? என்னுடைய மனைவியை அவளது தேச பக்தியிலிருந்து நீக்க நான் எண்ணிய கேவலமென்ன? ஐயோ! நண்பா! என் மனைவியை நான் ஆதிமுதல் செய்த சதிகளெல்லாம் இப்போது உன்னுடைய பரிசுத்தமென்கிற கண்ணாடியைக் கண்டவுடனே நன்றாக எதிரில் தெரிகின்றன. என்னுடைய துராக்ருதமான செய்கையை நான் என் வாயினாலேயே உரைக்கவும் மனம் துணிகின்றது. நீ உனது மனைவியை எண்ணிக் கதறிய காலத்திலேயே மனைவிமார்களின் சிறப்பும், அன்பும், உண்மையான காதலின் மகிமையும் என்னிதயத்தில் உதயமாயின. என் மனைவியை நான் இன்றுவரையில் துன்பச் சிறையில் இன்னல் விலங்குடன் அடைத்து வைத்ததோடு அவளுக்கு எமனாக ஓர் விபசாரியை அந்த உத்தமிக்குக் காவலாகவும் நியமித்தேன். ஐயோ! என் அரிய நண்பா! திலோத்தமாவின் கபடற்ற நிலைமையை—சாந்தச்வரூபத்தை—என்மீது கொண்டிருக்கும் கடும் ப்ரேமையை—மாசிலாத உள்ளத்துடன், தேசத்தின்மீது ஆசையுடன் பக்தி கொண்டிருக்கும் பெருமையை இப்போதே அறிகிறேன். இப்பாழும் நெஞ்சம் இத்தனை நாட்களாக இறந்து பட்டொழிந்தது போதும். இப்போதே அதற்கு உண்மையான அறிவெனும் உயிர் உதயமாகி இருக்கிறது. கடவுள் ஒன்றைக் காட்டி ஒன்றன் மூலம்

“உன் மனத்திலிருப்பதைத் தான் சொன்னேன். அதை வெளியிட்டால் என்ன குற்றம்” என்கிறார்கள் சிலர். தங்கள் வார்த்தையை ஸ்தாபிப்பதற்கே இவ்வாறு சொல்கிறார்களே யன்றி உண்மையில் அவர்கள் மனோபாவம் வேறு தான். ஏதோ சில சந்தர்ப்பங்களில் ஒன்றாக இருந்தாலும் இருக்கலாம்.

தான் மற்றொன்றைப் புகட்டுவார். உன்னைக் கொலை செய்ய வாரவிடின் என்னுடைய மவுட்டீகத் தன்மையும், துஷ்க்ருத்யங்களும், சண்டாள குணமும், உத்தமியை உதாசீனம் செய்த சித்தத்தின் அசுத்தியும், அன்னிய மாதினிடம் ஆவல் கொண்ட அக்ரம மனத்தின் அழிவும் நீங்கப் போவதே இல்லை. உன் மூலமாக எனக்கு நல் புத்தியைப் புகட்டினார் கடவுள். என்னப்பனே! சர்வலோக சரண்யா! என்னை என்னுடைய தீச் செயலின் மூலமாகத் திருத்தியாள முன் வந்ததற்காக எனது சாஷ்டாங்க நமஸ்காரத்தை ஏற்றருள வேண்டும். என்னப்பனே! துரை ராஜா! உன் பொறுமையைக் காணக் காண எனக்கு உண்டாகும் ஆனந்த வெள்ளத்திற்கோர் அளவே இல்லை. ஆனந்தமென்றால் உண்மையில் இதுதான் என்ற தத்துவத்தை இன்றே அறிந்தேன். கேவலமான—துச்சமாக மதிக்கக் கூடிய, ஒன்றிற்கும் உபயோகமற்ற—மெய்யின்பத்தைக் கண்டு அனியாயமாய் அதில் மூழ்கி என் வாழ் நாளை வீணாக ஆக்கிக் கொண்டேன். அதையும் பாபகரமான அன்னிய மாதினிடம் அகமகிழ்ந்து, அறிவிழந்து, அகந்தை கொண்டு, ஆத்மாவைக் கெடுத்த சண்டாளப் பாவியானேன். நான் எத்தனையோ பொய்களை உரைத்து அக்னி சாக்ஷியாகத் தாலி கட்டிய தங்கப் பதுமையை—பொறுமைப் பூஷணியை—மதியாது விலக்கி மூண்டமானேன். அவளுடைய அருமையை அறிந்து அவளுடன் நான் இன்பமாக வாழ்ந்திருப்பேனேயானால் கடவுளுக்கும், உலகத்து மக்களுக்கும் எத்தனை சிறப்பாக விளங்கும். என் கட்டை பதம் பெற்று ஒரு புதிய மேனியுடன் விளங்கி இருக்குமே! எல்லாம் என் தலைத் திமிரினாலேயே பாழாகிவிட்டதே! என்னுடைய அழிந்த காலத்தின் பலனை நான் இனிமேல் நன்மையில் சந்தோஷமாக அடையக்கூடுமா! இல்லை இல்லை. அந்த பலனை பலவிதத் துன்பத்துடன் கடவுளின் முன்னிலையில் அனுபவித்துத்

ஒரு சிலர், தமது நண்பர் தம்பால் வருங்கால் மிகத் தாராளமாக காபி ஓட்டலுக்கு அழைத்துச் செல்வதும் பிறகு பிரமாதமாக தாம் அன்னார்பால் அன்புடையர் போல் நடப்பதும் அதே மனிதர்க்கு தமது சிப்பந்தி காபி ஓட்டலுக்காகச் செலவழித்தால் "அவர் ஏன் வந்தார் நீங்கள் ஏன் வீணுக்கக் கொடுத்தீர்கள்?" என்கிறார்கள். இத்தகைய கற் மனம் இருந்தவாறென்னே!

தான் தீரவேண்டும். அருமை நண்பா! என் குற்றத்திற்கு என்னை நீ கட்டாயம் தண்டித்தே தீரவேண்டும். என்னை நீ வீணில் விட்டு விடலாகாது. உனது கரத்தினால் என்னுடைய அங்கத்தில் எதையேனும் சேதித்து விடவேண்டும். அப்போது தான் என் மனம் நிம்மதி யடையும்" என்று தன் மனம் போனவாறெல்லாம் தனது அஷ்டச் செய்கைகளை முற்றும் கூசாது கூறிப் புலம்புகின்றான்.

சற்றும் கனவிலும் கருதாத விதத்தில் இவன் மனம் மாறி விட்டதைக் கண்ட துரைராஜாவின் வியப்பிற்கோர் எல்லையே இல்லை. அவன் இன்ன பதில் பேசுவது, இன்ன செய்வது என்பதை அறவே மறந்து அப்படியே அவன் ஆலிங்கனத்திலுள் ஐக்கியமாகி அவன் மொழிகளை மட்டும் செவியில் வாங்கிக்கொண்டே ஆச்சரியப் பதுமையாக நின்றான். கடைசியாகக் கூறிய வார்த்தையைக் கேட்டதும் துரைராஜா அதற்குமேல் பேசாமலிருக்கக் கூடாமல், திலோத்தமாவின் புருஷனை (இனி அவனைப் பெயரிட்டு அழைப்போம்) ராமமூர்த்தியின் இரு கால்களிலும் விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து "என்னருமை நண்பரே! தாங்கள் கூறிய பாவையும் அறிந்தேன். தங்கள் தேவியாருடைய இல்லத்துச் சிறை அவருக்கு இன்றுடன் விடுதலையாகி இன்பச் சிறையை அடைந்ததற்காக நான் சந்தோஷப்படுவதுடன் எனது மாசற்ற தன்மையை தாங்கள் அறிந்துகொண்டதற்காக என்னுடைய மனப்பூர்வமான நன்றி யறிதலுடன் வந்தனம் செய்கிறேன். என்னுடைய உயிர் போவதைப் பற்றி நான் வருந்த வில்லை. ஒரு பாபமும் அறியாத நிரபராதியாக இருக்கையில் அநியாயக் குற்றத்துடன் மடிவதோடு என் கண்மணியோடு நான் ஒத்துழைக்காது உலகைத் துறக்கின்றேனே என்று தான் சற்று வருந்தினேன். வேறு ஒன்றுமில்லை. கடவுள் என்பால் கருணை காட்டியதாக நான் சந்தோஷப்படவில்லை. என் மூலமாகத் தமக்கு நற்காலம் பிறந்ததற்காக முதலில் சந்தோஷ மடைகிறேன். அதற்கே நான் வந்தனம் செய்கிறேன். உமக்குள்ள தீய காலத்தின் முடிவு இன்று போலும்,

சிலர் ரயிலடியிலிருக்கும்போது ஏதேதோ விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்துவிட்டு, ரயில் புறப்பட்டவுடனே அதோடு ஓடிவந்து சில முக்கியமான விஷயங்களைத் தெரிவிக்கின்றார்கள்.

உமது அங்கத்தில் ஒன்றையும் சேதிக்கவேண்டாம். உம்முடைய மனத்தில் அழுந்திக் கிடந்த துர்க்குணத்தையும், சந்தேகத்தையும், தீய செய்கையையும் இன்னு மற்ற கொடியதான எல்லாவற்றையும் சேதித்தெறியும். அதுதான் சரியான தண்டனை. அதைத்தான் கடவுள் அங்கீகரிப்பார். நண்பரே! உமது மாறுதல் என் மூலமாக இவ்வளவு சமீபத்தில் இருக்கிறதென்பதை நான் கனவிலும் அறியவில்லை. என் மனைவி இன்று காலையில்கூடத் தங்கள் தர்ம பத்னியாருக்காக வருந்திக் கண்ணீர் விட்டாள். உங்கள் மனைவியார் சரியான அன்னம் புசித்து பல வருடக் கணக்கில் ஆய்விட்டதாம். அந்தம்மாள் நேற்று காலை போஜனத்திற்கு இலையில் அமர்ந்த போது அவர்களை நோக்கி உங்கள் மற்றொரு மனைவியார் "வெட்கங் கெட்ட நாயே! உனக்கு இத்தனை அதிகாலையில் பிண்டமெதற்கு.? நன்றாகத் தின்று கொழுத்துவிட்டு ஒவ்வொரு ஜவுளிக்கடையின் வாசலிலும் மானங் கெட்டு நின்றுகொண்டு ஊர்ச் சட்டங்களைப் பேசுவதற்காக ஓடுவதற்குப் புறப்பாடு ஆகிறதோ!" என்று இன்னும் எத்தனையோ கூறத்தகாத வகையில் அனேக வகைகளைத் தங்கு தடையின்றிக் கொட்டினளாம். இந்த வார்த்தைகளின் சூட்டைத் தாங்காது உடனே இலையைவிட்டுச் சடக்கென்று எழுந்து மறுபேச்சின்றி வந்துவிட்டாளாம். அந்த விவரம் என் மனைவிக்கு நேற்று இரவு தான் தெரிந்ததாம். உடனே எங்கள் வீட்டில் அமுது ஊட்டி அனுப்பினளாம், அந்தம்மாளின் கஷ்டம் விடிந்ததுபற்றி நம்மிருவரையும்விட அதிகமாக என் கண்மணியே சந்தோஷமடைவாள். ஆகையினால் இவ்விஷயத்தை நான் அவளிடம் கட்டாயம் விரைவில் இப்போதே சென்று தெரிவிக்கவேண்டும். அன்பரே! தாங்கள் இங்கு நடந்த யாவற்றையும் ஒரு இரவில் கண்ட கனவென எண்ணிவிடுங்கள். ஆனல் மனம் மாறியதுகூடக் கனவாகப் போய்விடக் கூடாது. நாம் இனி வீட்டிற்குச் செல்வோம். உமது தேகத்தை

நாம் ரயிலுக்குப் போக எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கையில் சிலர் தொண தொண வென்று பேசிக்கொண்டு கால தாமதஞ் செய்து ரயில் பிரயாணத்தை நிறுத்தி விடுவதுடன், பல அசௌகரியங்களுக்கு நம்மை ஆளாக்கி விடுகிறார்கள்.

அன்னிய ஆடையால் மறைத்திருப்பதனுலேயே உமக்கு இது காறும் மதி சரியான வழியில் வேலை செய்யாதிருந்தது. இனிமேல் அதை விலக்கித் தூய்மையான கதரை தரித்துக்கொள்ள வேண்டியதே முதல் தண்டனையாகும். இரண்டாவது, உமது மனைவியுடன் ஒத்து உழைப்பது. மூன்றுவது, சந்தேகப் பேயை யோட்டுவது. நான்காவது, வீட்டிலுள்ள மூதேவியை விரட்டுவது. ஐந்தாவது காந்தியடிகளின் ஆணைக்கு உட்பட்டு நடப்பது. உமக்கு பஞ்ச பூதங்களின் சாக்ஷியாக ஐந்து தண்டனைகள்தான் விதித்தேன். அவற்றின்படி நடந்தால் போதும். வாரும்; நேரமாகிவிட்டது. மனித சஞ்சாரமற்ற இவ்வழியில் நாம் தனித்திருப்பது பிசகு'' என்று கூறியவாறு ராமமூர்த்தியுடன் பேசிக்கொண்டே நடந்தான்.

ராமமூர்த்தியின் மனையுள்ள தெருவில் வருகையில் "வந்தே மாதரம். காந்தியடிகளுக்கு ஜே! திலோத்தமா தேவிக்கு ஜே! ஜெயலக்ஷ்மியம்மாளுக்கு ஜே!'' என்கிற ஒரு பெருங் கோஷத்துடன் பெருத்த கூட்டம் செல்வதைக் கண்டு விஷயம் இன்னதென்று விளங்காது இருவரும் அக்கூட்டத்தில் ஓடி விசாரித்ததில் அவ்விரு பெண்மணிகளையும் அரசாங்கத்தார் கைது செய்துவிட்ட செய்தி யறிந்து ஆநந்த நிர்த்தனம் செய்கிறுர்கள். கூட்டத்தின் ஆரவாரத்தையும், அவ்விரு பெண்மணிகளுக்கும் ஜே போடுவதையும் கண்ட ராமமூர்த்திக்கு ஒன்றுமே தோன்றுது ஆநந்தபாஷ்பம் பொங்கி வழிகின்றது. அவன் ஊமைபோல அக்கூட்டத்தில் நடக்கின்றுன். துரைராஜாவின் சந்தோஷமோ கரைகடந்துவிட்டது. தனது மனைவியால் தான் இதற்கு முன்னர் அடைந்த துன்பம் முற்றும் பிறகு இன்பமாக மாறியதுபோல ஆயிரம் பங்கு சந்தோஷமடைந்துவிட்டான். அவனை யறியாது அவனும் ஜே கத்துகிறுன். "பெண்மணிகள் எங்கே?'' என்று விசாரித்ததில் அதிகாரிகளுடன் முன்னர் மோட்டாரில் செல்வதாகத் தெரிந்ததும் இருவரும் ஓட்ட

சிலருக்கு ஒரு விஷயத்தை எழுதுவதற்கு சில சமயம் முடிகின்றதாம்; சில சமயம் முடியாதாம். எழுத ஆரம்பித்துப் பழக்க வேண்டுமென்கிற அவாவை உள்ளவர்கள் அதில் பழகிக் கொண்டே இருந்தால் பிறகு வருகிறதா, இல்லையா! என்பதை அறியலாமல்லவா!

மாக ஓடி மோட்டாரைப் பிடிக்க எத்தனித்தார்கள். மோட்டார் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றதால் அவர்களும் அவ்விடம் சென்றார்கள். ராமமூர்த்தி அத்தருணம் கடைக்கு ஓடி கதர் தரித்துக் கொண்டு மீண்டும் இங்கு வந்தான். கமிஷனர் ஆபீஸில் இரு மங்கையர் திலகங்களும் முக உல்லாசமாய்ப் புன்னகை பூத்த வதனத்துடன் அளப்பரிய சந்தோஷத்தினால் பூரித்தவாறு உட்கார்ந்திருக்கின்றார்கள்.

இவ்விரு நாரீ ரத்தினங்களைக் கண்ட எல்லோரும் "ஆகா! சாக்ஷாத் லக்ஷ்மிதேவியைப்போன்ற இவர்கள் செய்த பாக்கியந்தான் என்னே! என்ன அருமையான தொண்டாற்றி கண்ணபிரான் ஜெனித்த விடத்திற்கு அரசாங்க விருந்தினராகச் சென்று தவம் செய்து தாம் செய்த தொண்டின் பலனைப் பெறுவதற்கன்றோ துணிந்து முன் வந்துவிட்டார்கள்" என்று வாய் ஓயாது துதி செய்துப் புகழ்கின்றார்கள். ராமமூர்த்தியின் மாறுதலைச் சிறிது மறியாத திலோத்தமாவின் முன்பு ராமமூர்த்தி கதர் வஸ்திரதாரியாகச் சென்று, "என் கண்ணே திலோத்தமா! உன் மகிமையை, உன் பெருமையை, உன் தூய குணத்தின் அருமையை—உனது தேச பக்தியின் முதுமையை—இன்றே அறிந்தேன். மகா பதிதனாகவிருந்த நான் இன்றே புதியவனாக மாறிவிட்டேன். உன்னுடைய காத்தைப் பற்றிக் கங்கணம் கட்டியும் அதன் மகிமையறியாது நான் நாசமாகிவிட்டேன். அன்பே! திலோத்தமா! உனக்குற்ற ஓர் பெரும் சிறப்பைக் காண என் இதயம் பூத்து மலர்ந்து மதுவைக் கக்குகின்றது. என் கண்ணே! த்யாக மூர்த்தியான காந்தியடிகளின் சீடர்களாகிய உங்கள் மகிமையே இங்ஙன மிருக்க அப்புண்ணிய மூர்த்தியின் புகழினைப்புகலவும் வேண்டுமோ! உலகம் போற்றும் உத்தமரின் பராக்ரமத்தை அறிந்தேன். திலோத்தமா! உனக்கு நான் இதுவரையில் செய்த பிழைகளுக்காக என்னை நீ

காதல் விஷயத்தில் அனேகருக்கு அனேக விதமான எண்ணங்கள், வித்யாசங்கள் தோன்றலாம். ஆனால் எதையும் பிறர் வாக்கை எதிர்பார்த்துச் செய்வதென்பது பழய பழக்கம். தற்போதோ மனமே இராஜா!......மந்திரி, இதற்குப் பிறர் பதில் கூறச் சாத்யமேயன்று.

மன்னித்திடுவாயா! என்னறிவிழந்த நிலைமையை நான் இன்றே உணர்ந்தேன். இனி நான் புத்துயிர் பெற்றப் புதிய மனிதனேயாவேன். எனக்கு ஈசன் இன்றே சரியானபடி கண்ணைத் திறக்கச் செய்தார். என் கண்ணே! உனக்குற்ற மகிமைதான் என்னே! இத்தகைய புகழ் பெற்றிலகக் கூடிய நின்னை அக்கினி சாக்ஷியாக மணம் புரிந்தும் என்னுடைய துரதிருஷ்டம் எனக் கந்த புகழ் அணுகவிடாது போய்விட்டது. இனி என்மீது சந்தேகங் கொள்ளவேண்டாம். என் மனத்திற் புகுந்திருந்த சந்தேகப் பேயை ஓட்டிவிட்டேன். நான் ஓர் நிரபராதியின்மீது மகா கொடுமையான எண்ணம் எண்ணியதனாலேயே என் மதி திருந்த மடையும் மார்க்க முண்டாயது. எனக்கு ஸ்ரீமான் துரைராஜா அவர்கள் தான் குரு என்பதை நான் மறுமையிலும் மறக்க மாட்டேன். என் கண்மணீ! என்னருமை திலோத்தமா! எனக்கு இத்தனை நாட்களாக இருந்த துர்க்குணம் மாறி நற்குணம் பிறந்து உன்மீது என் மனம் திரும்புங் காலையில் உன்னைப் பிரிய நேருகின்றதே என்ன செய்வேன். உனக்கு அரசாங்கத்தினர் எத்தனை மாதம்—எத்தனை வருடம்—தண்டனை விதிப்பார்களோ! தெரியவில்லையே, அதுவரையில் நீயும் நானும் பிரிந்து வாழ்வது மிகக் கடினமாகத் தோன்றும் போலிருக்கிறதே! திலோத்தமா! உனக்காக எத்தனை ஜனங்கள் மாலையை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். உனக்கு ஜே கோஷம் செய்தவாறு ஆயிரக் கணக்கில் கூட்டங்கள் கூடி இருக்கின்றார்கள். உன் மகிமையை இப்போதல்லவா அறிந்தேன். என் திலோத்தமா! என்னை மன்னிப்பாயா! என்னை க்ஷமிப்பாயா!" என்று தடபுடலாகப் பேசிக் கண்ணீர் வடியத்திலோத்தமாவின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

தன்னுடைய கணவனுக்கு இத்தகைய மாறுதல்கள் உண்டாகுமென்று கனவிலும் கருதாத திலோத்தமாவுக்கு இப்போது கண்

சில தந்திரப் பூனைகள் தங்கள் பெண்ணை அழைத்துக்கொண்டு போவதற்கு ஆடுகிற ஆட்டமும், போடுகிற வேஷமும் கணக்கில்லை. மாப்பிள்ளை தம் கைவசமாகி மயங்கிக் கிடக்கும் தைரியத்தினாலேயே அவர்களின் நாட்டாமை ஜெயிக்கின்றது என்பதை அறிந்த பிறர் அவ் விஷயத்தில் தலையிடா திருப்பதே நலம்.

னால் காண்பதும் காதால் கேட்பதும் உண்மைதானா! அன்றி ஏதேனும் உருவெளித் தோற்றமா! என்கிற சந்தேகமே உதித்து விட்டது. இடீரென்று தன் கணவன் இவ்விதம் பேசியதால் ஒரு கால் சித்த ஸ்வாதீனமற்று இவ்வாறு பேசுகிறானோ! என்றும் நினைத்துவிட்டாள். அவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கடைசி வரையில் கேட்ட பிறகும், அவனுடைய முகத்தின் மாறுதலைக் கண்டபிறகும்தான் அவளுக்கு உண்மை விளங்கியது. அதோடு துரைராஜாதான் தனக்கு குரு என்று சொல்லியதால் அவரிடம் விசாரித்தால் விஷயம் தெரியவரும் என்று மனந் தேறினாள். கணவனை நோக்கி அவன் பாதம் பணிந்து "ஆகா! நான் இம் மண்ணில் பிறந்ததன் பலனை இன்றே அடைந்தேன், என் பிராண நாதா! இப்போதேனும் என் மீது கருணை பிறந்து என் கவலையைப் போக்க முன் வந்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைக் கடவுளுக்கும் தமக்கும் செலுத்துகின்றேன். இந்த மாறுதல் உண்மையான மாறுதலா! என்னுடைய இறந்த காலம் செல்ல மற்ற காலம் முற்றும் சந்தோஷமாகக் களிப்பாகக் கடத்த வேண்டிய தீரமான மாறுதலா! நாதா! என் ஜென்மம் இன்றே சாபல்யமாயது. தேச வேவையின் மூலம் சிறை வாச மேற்பட்ட சந்தோஷத்துடன் என் மனப் பிணியை நீக்கி மகிழ்ச்சியைத் தாங்கள் அளித்தீர்கள். இவ்விரண்டு பாக்கியங்களும் ஏக காலத்தில் எனக்குக் கிடைத்ததனாலேயே நான் பெரும் பேறுற்றியவளானேன். நாதா! இனி என்னைக் கைவிடுவதில்லை என்று உறுதியான வாக்களியுங்கள். என்ன காரணத்தினால் இத்தகைய மாறுதல் உங்களுக்கு உண்டாகியது. இதை நானறிய அவாக் கொண்டுளேன்; தயை சாற்றி உரைக்கவேண்டும்" என்று கேட்டான்.

பிறகு அவன் நடந்த விவரங்களைக் கூறினான். இதுகேட்ட திலோத்தமா மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தாள். பின்னும் அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இது இங்ஙனமிருக்க, துரை

ஆள்மீது ஆள் தூக்கிப்போட்டுப் பேசும் சில குள்ள நரிகளின் செய்கையைக் காண வெறுப்புண்டாகின்றது. அவர்களிடம் உண்மையைக் காண்பது கனவிலும் இயலாது. அவர்களின் மூட்டை தான் முதலில் நிற்கும்.

ராஜா தன் மனைவி கைதியானாள், என்கிற வாக்கியத்தைக் கேட்டு அவனடைந்த ஆனந்த வெள்ளத்திற்கு ஓர் அளவே இல்லை. பெரும் குவியலான நிதியை ஓர் தரித்திரன் கண்டால் எவ்வாறான சந்தோஷமடைவானோ அதற்கு மேல்பட்ட சந்தோஷத்தை அன்றேயடைந்து பூரித்தான். ஜெயலக்ஷ்மி இருக்குமிடத்திற்குச் சென்று அவ்விடம் ஓர் பொது விடம் என்பதையும் மறந்து "என் கண்மணீ! ஜெயலக்ஷ்மீ! இன்றே எனது மனது மட்டற்ற, எல்லையிலா ஆனந்தத்தை அடைந்தது. உன் பெயருடைய அர்த்தத்தை இன்றே நிலை நாட்டினாய்; ஜெயம் பெற்றாய்! என்னையும் ஜெயம்பெறச் செய்தாய். என்னருயிர்க் கண்ணே! ஜெயலக்ஷ்மீ! உன்னுடைய முற்காலத்திய மவுட்டிகத் தன்மையைச் சற்று நினைத்துப் பார். "உலகத்திற்காக உழைத்த உத்தமி சிறைச் சாலைக்குள் சென்றாள். அவளல்லவா ஸ்திரீ ரத்தினம். அவளல்லவா உண்மையான பெண்ணரசி" என்று உன்னைப் போற்ற வெளியில் ஜனங்கள் செய்யும் ஆரவாரம் என்னுடைய ஆனந்தத்தை அதிகரிக்கச் செய்கின்றது. உன் பெருமையை இன்று தான் நீ அறிவாய். என் மனத்தில் இவ்விதமான பேரானந்தம் நான் என்றடையப் போகிறேன் என்று ஏங்கித் தவித்தேன். அதே வாட்டமாக வாடினேன், மனம் உருகினேன். கடவுள் என்பால் கருணை கூர்ந்து இன்றே அப்பேரானந்தப் பதவியை அளித்தார். என் மனம் இன்று கண்ட ஆனந்தத்தை என்றும் அடையும்படியாக நான் கடவுளை வேண்டுகிறேன். ஜெயலக்ஷ்மீ! ஜெயிலில் எவ்விதம் வசிப்பது என்று பயப்படுகிறாயோ! கண்ணே! உனக்கந்த திகிலும், பயமும் சற்றும் வேண்டியதில்லை. உன்னைப் போன்ற ஸ்திரீ ரத்தினங்கள் பலர் வேலூர் சிறைச் சாலையில் உன் வரவை நோக்கி எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய துணைமட்டுந்தான் உனக்கு என்று நினைக்காதே! நாம் நம்பி இருக்கும் பாரதத்தாய் உன்னுடைய அருகிலேயே சதா இருக்கிறாள். அவளுடைய அருள் சக்தி உன்னைச் சூழ்ந்தவாறிருக்கிறது. காந்தியடிகளின் நம்பிக்கை என்கிற ஓர் தெய்வீகமான சக்தியை நீயும் நம்பி இருந்தால் அதன் பலனை நீ

எல்லோரிடத்திலும் வெகு அடக்கம் போலும் சாதுவைப் போலும் சிலர் நடந்துகொண்டவாறு உள்ளுக்குள்ளேயே விஷத்தால் துளைத்து விடுகிறார்கள். அவர்களின் புருஷனோ கேவலம் முண்டமாக ஆகிவிடுகிறான்.

அடையாமல் போக மாட்டாய். உனக்கொரு குறைவு மில்லை. இராம னிருக்கும் இடமெல்லாம் அயோத்தி என்று லோக மாதாவாகிய ஜானகி சொல்லிய வாக்கை நீ மறக்கமாட்டாய். அதே போல இந்த இடத்தின் மகிமையைச் சற்று எண்ணிப் பார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவதாரம் செய்த ஜனன பூமியாகிய இதில் நீ சதா தவம் செய்வது மிக்க அவசியமாகையினால் நீ கவலையற்று மன அமைதியுற்று கடவுளைத் தோத்திரம் செய்வாய் கண்ணே! நீ சென்றது போன்று நான் வருவதற்குத் தயாராக விருக்கிறேன். நான் எந்த நிமிடம் கைதியாவேன் என்று எனக்குத் தெரியாது. நான் நினைத்த ஆசைப்படிக்கு இருவரும் ஒன்றாக உழைத்தோம். ஒன்றாகக் கைதியாகவும் காலம் சமீபித்து விட்டது. ஜெயலக்ஷ்மி! நீ உன்னுடைய மனத்தில் என்ன எண்ணி இருக்கிறாய் என்பதைச் சற்றும் யோசனை செய்யாமலும் தியங்காமலும் சொல்வாய் கண்மணி! ஏன் கண்ணீர் வருகிறது?'' என்று கூறியவாறு அவள் கண்ணைத் துடைத்தான்.

அடக்க வியலாத ஆநந்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கும் ஜெயலக்ஷ்மி என்னும் மின்னாள் தன் கணவன் கூறிய மொழிகளைக் கேட்டுப் பின்னும் பதின் மடங்கு அதிகரித்த ஆநந்தத்தை அடைந்து தன் கணவனின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு ''என் கண்ணாளா! என் இஷ்ட தேவதையே! தேச பக்தியின் மகிமையை இப்போதே நான் அறிந்தேன். காந்தியடிகளின் கண்ணியத்தை உணர்ந்தேன். என் மனம் இன்று அடைந்த பேராநந்தத்தைப் போன்று இதுவரையில் என் பிறவியில் ஒரு நாளேனும் கண்டதில்லை. இத்தகைய உன்னதமான பதவியை நான் என் மண வறையிலேயே அடைந்திருந்தும் அதை அனுபவிக்காமல் துரஷ்திர்ஷ்டஹீனையாகப் போய் விட்டேன். நான் வருத்தப் பட்டுக் கண்ணீர் உதிர்க்க வில்லை. இன்பத்திற்கும் கண்ணீர்; துன்பத்திற்கும்

என் பிறவியில் நான் அடைந்த பாக்கியங்கள் இரண்டுதான். அவ்விரண்டும் என்றும் நிலைத்திருக்குமாயின் அதுவே போதும் என்கிறாள் ஒரு நங்கை. மனமில்லா மணத்தைச் செய்ததன் கொடுமையினால் இத்தகைய வருத்தம் இளமைப் பருவத்திலேயே உதித்து விடுகின்றது.

கண்ணீர் அது போன்று எனக்குத் தாங்கவியலாத ஆநந்தக் கண்ணீர் வருகின்றதே யன்றி வேறல்ல. நாதா! நான் இன்று பெரும் பாக்கியம் செய்தேன். என் பிறவியே ஸார்த்தக மடைந்ததாக என்னுள்ளம் எண்ணிப் பூரித்துப் புளகாங்கித மடைந்து ஆநந்த பாஷ்பத்தைச் சொரிகின்றது. புனிதமான இச்சிறைவாசத்தின் பேரின்பத்தை எனக்கு இன்று அளித்த என்னுயிர்க் காதலராகிய தங்களுக்கும் கடவுளுக்கும் எனது மன மார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இத்தகைய அருமையான சிறைவாசத்தைச் செய்வதின் மேன்மையை அறியாத பாமர மூட ஜனங்கள் தாங்கள் சிறைவாசம் செய்த காலையில் எத்தனை தூஷித்துப் பேசி என் மனத்தை மாற்றி விட்டார்கள்! கேவலம் இழிவான களவு, கொலை, மோசம், பொய் சாக்ஷி சொல்லுதல் போன்ற காரியத்தைச் செய்து விட்டுச் சிறைக்குச் சென்று விட்டதாக வல்லவோ பேசினார்கள். ஆகா! அறியாமையினால் ஜனங்கள் சொல்லிய வசையை இப்போதல்லவா உணர்ந்தேன். தேச சேவையின் நிமித்தம் சிறைச் சாலையே தவச் சாலையாக எண்ணியுள்ள பக்தர்களின் மகிமையும், இவ்விடத்தின் மகிமையும் இன்றல்லவா விளங்கியது. என் பிராண நாதா! என் மனம் நிம்மதி யடைந்தது. என்னுடைய சிறைவாசத்தை முன்னிட்டு இங்கு தங்களின் அநுதாபத்தைக் காட்டும் பொருட்டு அனேக ஜனங்கள் கதர் மாலையும், புஷ்ப மாலையும் போட்டு எங்களை மகிழ்விக்க வந்திருக்கிறீர்கள். என்னரிய மகா ஜனங்களே! சகோதர சகோதரிகளே! எங்களைத் தாங்கள் மகிழ்விப்பதற்கு இந்தப் பூமாலையினாலும் ஜெ கோஷத்தினாலும் மட்டும் முடியாது; இதனால் எங்கள் மனம் சாந்தி யடையாது; மகிழ்ந்து விடாது. எங்களை நீங்கள் உண்மையாக மகிழ்விக்க எண்ணங் கொண்டிருப்பதுண்டாயின் எங்கள் ஸ்தானத்தில் நீங்கள் தங்கி உங்கள் வேலையைச் செய்து உடனே இந்த புனிதமான இடத்திற்கு வரவேண்டும். இதைத் தான் நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

யார் அத்யந்த பக்ஷத்தை நம்மிடம் வைத்து அன்போடு ஆதரித்துபசரிக்கின்றார்களோ, அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி செல்ல மனம் தாவுகின்றது. அங்ஙன மில்லாதோர் "என் வீட்டிற்கு வாவில்லை. என் வீட்டிற்கு வாவில்லை" என்று வருந்தினால் எவ்விதம் மன மிசையும்.

இவ்விதம் செய்தால்தான் எங்கள் மனம் குளிரும்; எங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும். உங்களுக்கும் மாற்றற்கரிதான மகிமை பெருகும். உலகம் போற்றும் உத்தமரை நாம் பணிந்து அவர் வழியைப் பின்பற்றினால் நமக்கு ஒருபோதும் குறைவில்லை. நம்முடைய காரியத்திற்கு ஜெயம் கட்டாயம் கிடைக்கும். என்னரிய சகோதரிகளே! நீங்கள் என்னைப் பார்த்துப் பரிதாபத்துடன் கண்ணீர் விடுவதில் பிரயோஜன மில்லை. என் வழியைப் பின்பற்றி நடப்பதாக வாக்குறுதி எனக்குக் கொடுங்கள். அப்போதுதான் நீங்கள் இந்த பாரத நாட்டில் உதித்த வீரப் பெண்மணிகளாவீர்கள். நீங்கள் இன்னமும் அன்னிய ஆடைக்குள் மறைந்தபடியே புலித் தோலைப் போர்த்த பசுவைப் போல கண்ணீர் சிந்துவதில் என்ன உபயோகம். இந்தக் கண்ணீர் உண்மையாக விருக்கும் பக்ஷத்தில் உங்கள் மேனியில் அன்னிய ஆடை இருக்குமா! அன்னியரின் ஆடையால் நாம் அங்கத்தை மூடி இருக்கிறவரையில் நமக்கு மகிமை யுண்டா! இல்லை, இல்லை; ஒருபோது மில்லை. நீங்கள் உண்மையான அனுதாபத்தைக் காட்டும் உத்தமிகளாக விருப்பின் உடனே கதரைத் தரித்துக்கொண்டு நாளைய தினம் விசாரணை ஸ்தலத்திற்கு வாருங்கள். வந்து தங்கள் கதர்க் காஷியைத் தாருங்கள். தந்து களி கூறுங்கள். கூறி நாட்டிற்கு ஜெயம் பிறக்கும் வழியைப் பாருங்கள். பார்த்து தேசத் தொண்டர்களாகச் சேருங்கள். சேர்ந்து தேசமும் தேச மக்களும் க்ஷேமமடையக் கடவுளைக் கோருங்கள். கோரி அவர் காட்டும் வழியில் ஊருங்கள்; ஊர்ந்து மகாத்மாவைச் சாருங்கள். சார்ந்து நாட்டைக் காவுங்கள். இதைத்தான் நான் எதிர்நோக்குகின்றேன். என்னரிய சகோதரிகளே! அனியாயமாக வருடந்தோறும் நம் நாட்டினின்றும் 70கோடி ரூபாய் அன்னிய நாட்டிற்குச் செல்வதெல்லாம் அனேகமாக பெரும்பாலும் ஸ்திரீகளாகிய நம் பொருட்டாகத் தான் செல்கின்றது; அதைத் தடுத்துக்கொள்ளவே நாம் வழி செய்யவேண்டும்.

பிரசங்கம் செய்வதில் திறமையும், வாக்கு வன்மையும் வேண்டும். அவ்வாறு எல்லாம் பொருந்தியவர்களின் பிரசங்கத்தைக் கேட்கும் ஜனங்களுக்கு விஷயம் விளங்கி மனம் மாறுகின்றது. தடாம் புடாம் என்று தடியடிக்காரர்களின் பேச்சினால் மக்களின் மனம் குட்டிச்சுவராகி விடுகிறது.

காமோ அடிமை! அடிமைக்கு ஆடம்பர வாழ்க்கை என்ன! பட்ட மகிமைகள் என்ன! படாடோப மென்ன! இவைகளெல்லாம் ஏழைகளை வஞ்சித்து அவர்களின் வயிற்றி லடித்து நாம் சுகமுற எண்ணும் கிராதகச் செய்கையே யாகும். அவர்களின் சுக வாழ்க்கையைக் கோரி நீங்கள் உங்கள் ஆடம்பர வாழ்க்கையைக் குறைத்துக்கொள்ளுங்கள். அவர்களின் வயிறு குளிர்ந்தால் உங்கள் குடும்பமே குளிர்ந்து வாழும்; அனுவசியமான நகைகள் வேண்டாம்; நமக்கு முக்கியமான நகை எது என்றால் முகத்தில் தோன்றும் சிரிப்பு தான். அந்த நகை நன்றாக என்றும் இருந்தால் அதுவே போதும். வைர மேன்பது மனத்துள் இருக்கும் தேச பக்தியின் உறுதி தான் வைரம். இவ்விரண்டு பூஷணங்களும் நன்றாக விருந்தால் நமக்குக் குறை வில்லை. ஏழைகளைக் கவனிக்கவே ஏழைப் பங்காளனாக மகாத்மா தற்போது பாடு படுகின்றார் என்பதில் தாங்கள் சற்றும் சந்தேகங் கொள்ளவேண்டாம். சகோதரிகளே! அன்னிய நாட்டாரை அனுவசியமாகத் திட்டாதீர்கள். நாம் செய்யவேண்டிய கடமையைச் சரிவரச் செய்தால் போதும். அதிலிருந்து நாம் நன்றாகத் தேறிவிட்டால் கடவுள் நமக்கு அதன் பலனைக் கொடுத்து விடுவார். ஆகையினால் கவலைப்படாதீர்கள்; ஆத்திரப் படாதீர்கள்; சாந்தமாக வேலை செய்யுங்கள்." என்று நீண்டதோர் பிரசங்கம் செய்தாள்.

இப் பிரசங்கத்தைக் கேட்ட மகா ஜனங்கள் கர கோஷம் செய்து "என் தாய்மார்களே! நாங்கள் சத்தியமாக இன்று முதல் கதரை யின்றி வேறு எதையும் கட்டுவதில்லை. இது சத்தியம். எங்களுக்குப் புத்தி வந்தது. நாங்கள் விசாரணைத் தலத்திற்குக் கதருடை யுடன் உங்கள் விருப்படியே வருகிறோம். உங்களுக்குப்

தேசாபிமானம் பொருந்திய அன்பர்களே! பெரியார்களே! கலியுகத்தில் அவதார புருஷனாய் ஜெனித்துள்ள காந்தியடிகள் இந்தியருக்காக—ஏழைப் பங்காள்னாய்—அக்கரை சீமைக்குச் சென்றிருக்கிறார். அவர் தேக ஆரோக்யத்துடன் மங்களகரமாய் வரவேண்டு மென்று எல்லோரும் இறைவனை வேண்டித் தொழுங்கள். அந்த விதத்திலாவது தேச பக்தியிலீடுபடுங்கள்.

பிறகு நாங்கள் தயாராக இத் தவச் சாலைக்கு வருகிறோம்" என்று ஒரே கோஷமாகத் தெரிவித்தார்கள்.

ஜெயலக்ஷ்மிக்கும் திலோத்தமாவிற்கும் விழுந்த புஷ்ப மாலைகளின் எண்ணிக்கை கூறத் திறமன்று. இரு பெண்மணிகளைச் சென்னைச் சிறைச் சாலையில் கொண்டு வைத்தார்கள். அவர்களுக்கு அதிகாரியின் அனுமதியின் பேரில் சாப்பாடு விட்டி விருந்து அளிக்கப்பட்டது. உல்லாச மேலீட்டால் இரு பெண்மணிகளும் தங்கள் மனம் போனவாறு பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் காலத்தைக் கடத்தினார்கள்.

பொழுது புலர்ந்தது. ஜனங்கள் திரள் திரளாகக் கதர் கட்டிக்கொண்டு வந்து கூடிவிட்டார்கள். இரு பெண்மணிகளின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கிரமப்படிக்கு விசாரணையாகி இருவருக்கும் (6) ஆறு மாதம் சிக்ஷை விதித்து விட்டார்கள். அளப்பரிய ஜனங்களின் கரகோஷத்தினிடையிலும், பூ மாலைகளின் இடையிலும், ஜே;ஜே கோஷத்தின் இடையிலும் இரு பெண்மணிகளும் போலீஸ் பந்தோபஸ்துடன் வேலூர் சிறைச் சாலைக்குக் கொண்டுபோகப் பட்டார்கள். நங்கையரிருவரும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை, பாரதமாதாவை வேண்டி பாடிக் கொண்டே வேலூர் ஜெயிலை அடைந்தார்கள்.

* * * * * *

மனைவிகளைச் சிறைச்சாலைக்கு அனுப்பிய மணாளர்களிருவரும் அன்று முதல் வெகு ஒற்றுமையாக தேசத் தொண்டில் ஈடுபட்டு வீதிதோறும் கதர் விற்பது, வீட்டுக்கு வீடு சென்று சொல்வது, ஆங்காங்கு கூட்டம் போடுவது முதலிய தொண்டுகளைச் செய்

ஆத்மார்த்தகமான அன்பு ஒன்று; சரீரார்த்தமான அன்பு வேறு. மேல் போக்கான அன்பு ஒன்று. அவைகளில் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமான அன்பைக் கடவுள் அளிக்கின்றார். ஆனால் அன்பு காட்டி இனித்துப் பேசி சிநேகம் செய்துவிட்டுப் பிறகு அடியோடு மறந்து அன்னியராக மாறிவிடும் சிநேகிதர்—அன்பர்கள்—கடவுளைக் கூட ஏமாற்றி மோசம் செய்துவிடுவார். இதில் ஐயமின்று.

பத் துவக்கினார்கள். இவர்களோடு இன்னும் அனேக ஆயிரக் கணக்கான தொண்டர்கள் சேர்ந்துவிட்டார்கள். ஒரு தினம் ராம மூர்த்தியும் துரை ராஜாவும் வர்த்தமானப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கையில் அப் பத்திரிகையில் பெரிய எழுத்தில் கீழ்க் கண்ட விஷயங்கள் காணப்பட்டன.

அனியாயம்! அனியாயம்!

ஓர் கள்ளுக்கடைக்காரரின் கொடூர் செயல்!

ஒரு வீரமாதின் அபாயகரமான நிலைமை!

இன்று பிற்பகல் 3மணிக்கு தேசத் தொண்டே தெய்வத் தொண்டாகப் போற்றி வரும் ஸ்ரீமதி ஸாவித்திரி யம்மாள் தன் கணவனைத் தேடிக்கொண்டு, அவரை நல் வழிபடச் செய் யும் பொருட்டு அவர் இருப்பிடம் விசாரித்தறிந்துகொண்டு அவர் ஓர் கள்ளுக்கடைக்காரர் வீட்டி லிருப்பதாக அறிந்து அவ்விடத் திற்கு வெகு தீரத்துடன் — தைரியத்துடன்—வந்து தன் கணவனைக் கண்டு குடிக்கவேண்டாமென்று கூறி, குடியின் அனியாயத்தை அங்குள்ள பொது ஜனங்களுக்கு எடுத்துக் கூறிய தோடு, கள்ளுக் கடைக்காரருக்கும் ஹிதமாக உபதேசம் செய் கையில் அந்தக் கள்ளுக் கடைக்காரருக்கு அதிக கோபம் பிறந்து உடனே தன் கைத் துப்பாக்கியினால் அந்த மாதைச் சுட்டு விட்டாராம். அந்தம்மாள் பலமான அடிபட்டு கவலைக் கிடமான நிலைமையில் வைத்திய சாலையிலிருக்கிறார்கள். இந்தக் கள்ளுக்கடைக்காரரின் செய்கையினால் ஜனங்களுக்கு பரபரப்பு உண்டாகிவிட்டது. அந்தப் பெண்ணுடைய புருஷன் அப்போதும் ஆனந்தமாகக் குடித்துக்கொண்டிருந்தானாம். கள்ளுக்கடைக்காரர்மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. மற்ற விவரம் பிறகு வெளியாகும்.

புருஷனிடத்தில் மனைவி பயந்து நடப்பது தான் இயற்கை. மனைவி யிடத்தில் சில புருஷர், தோப்புக்காணம் போடுகிறார்கள். இது ஓர் பெரிய வேடிக்கை. மனைவியினுடைய மகிமை என்னவோ அந்த பயந்தாங் கொள் ளிகளுக் கல்லவா தெரியும்.

என்றதைப் படித்தவுடனே இருவரின் மனமும் தத்தளித்தது. "ஹா! ஸாவித்திரியையா சுட்டுப் போட்டான் பாவி!" என்று கர்ஜித்தார்கள். இருவரின் ஆத்திரமும் எல்லை கடந்தது. அந்த பத்திரிகையை மீண்டும் புரட்டிப் பார்க்கையில் மற்றொரு பெரிய தலையங்கம் அடியில் வருமாறு காணப்பட்டது.

மனைவியைக் கொல்ல முயன்ற மாபாவி!
மோட்டார் எமனால் நேர்ந்த விபத்து.

கிருஷ்ணசுவாமி என்ற வேசிக் கள்ளன் ஒருவன் வெகு காலமாக தன் மனைவியைப் பகைத்து வெறுத்து வந்தான். மகா உத்தமியாகிய அவன் மனைவி ரங்கமணியம்மாள் தன் கணவனுக்கு நயத்திலும், பயத்திலும் பலவிதமாக நற்புத்திகளைப் புகட்டியும் அதற்கான முறையில் வேலை செய்தும் அந்தக் கள்ளன் மதி திருந்தாமல் அவள் செய்த செய்கைகளுக்கு அவள்மீது த்வேஷங்கொண்டு தீர வைராக்யத்தைக் காட்டி வந்ததாகத் தெரிகின்றது. அந்த உத்தமியை ஒழிப்பதிலேயே நாட்டமாகக் கண்ணுங் கருத்துமாக அந்த கிருஷ்ணசாமி இருந்ததாகப் பிறகு தகவல் விசாரித்ததில் தெரியவருகிறது. சமயம் பார்த்துக் கொண்டே இருக்கையில் நேற்றிரவு 10 மணி சுமாருக்கு அந்தம்மாள் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து விட்டுத் திரும்பி வருகையில் அவள் புருஷனான கிருஷ்ணசாமி தான் ஓட்டிக் கொண்டுவந்த மோட்டாரை அந்தம்மாளின் பேரில் ஏற்றி விட்டானாம். உடனே அந்தம்மாளுக்குப் பிரக்ஞை நீங்கி விட்டதாம். முதுகு எலும்பிலும், தலையிலும் பலமான அடிபட்டு ரத்த ஆறு ஓடி விட்டதாம். விபத்து நடந்த வுடனே ஜனக் கூட்டமும் போலீஸ்காரர்களும் வந்து சூழ்ந்துகொண்டு கிருஷ்ணசாமியைக் கைதியாக்கி விட்டார்கள். அந்தம்மாளின் படுகாயத்தினால்

எல்லாவற்றையும் விட வேடிக்கை ஒரு மனிதன் மாமியாரிடம் பயந்து நடப்பது. அவன் அசட்டுத் தன்மையினால் மாமியார் வீட்டார் நன்றாகக் கொழுத்துத் தலைக்குமேல் ஏறுகிறார்கள். அவன் தன் மடத்தனத்தை பிறகு ஒரு காலத்தில் கூடவா தெரிந்து கொள்ளாமல் போவான்.

பேச்சு மூச்சில்லை. வைத்யசாலைக்குக் கொண்டுபோகப் பட்டி ருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகள் கதறும் பரிதாபத்தைக் கண்டால் கல்லும் கரையும்; இரும்பும் உருகும். மனைவியைக் கொல்லும் மாபாவிகள் உலகில் உள்ள வரையில் உலகத்திற்கு க்ஷேமம் உண்டா! மற்ற விவரங்கள் பிறகு வரும். மருத்துவர் களின் வாக்குமூலத்தினால் அந்தம்மாளின் நிலைமை வெகு பயங்கரமாக இருக்கிறது என்று அறிய மிக்க விசனப்படுகிறோம்.

இதையும் படித்தார்கள். "அந்தோ! ஒரே தாய் வயிற்றில் பிறந்து இருவரும் இன்பம் கண்டறியாது துன்பத்தையே துணை யாகக் கொண்டு வாடியதற்கொப்ப இருவர்களின் நிலைமையும் கடை சியில் தம் புருஷரால் மாளும்படியாகவா நேரிட்டுவிட்டது. என்ன கொடுமை. ஹா! ஸாவித்திரி! சகோதரி! உன்னிடம் தேச சேவையி னிமித்தம் அதிகம் பழகினேன். உன் சகோதரியை அதிகம் கண்ட தில்லை எனினும் கணவன் மூலம் மாளும்படியான முடிவு அவளுக்கு ஏற்பட்டதை எண்ண மனம் அடிக்கின்றதே! ஐயோ! என்ன செய் வேன், நாம் இப்போதே வைத்தியசாலைகளுக்கு ஓடுவோம்" என்று இருவரும் கூறியவாறு தேகம் பதைக்க, ஆவி துடிக்க, மனம் தத் தளிக்க ஓட்டமாக ஓட வாரம்பித்தார்கள். பாரத மாதா! நீ தான் துணை புரிய வேண்டும்.

சில நாள் இரவுபகலாக சிநேகம் செய்துவிட்டு திடீரென்று அவர்களை அடியோடு மறந்து அந்த வீட்டு வழியே ஆயிரம் தரம் சென்றாலும் தலை நிமிர்ந்து பாராமல் செல்வதற்கு ஒரு சிநேகிதையின் மனம் துணிந்ததே! ஹா! என்ன விநோதம். தனது ஆதிகாலப் பழக்கம் எங்கே மறைந்ததோ! தன் மனக் கிலேசத்தை முறை யிட்டது எங்கே ஒளிந்ததோ! தான் கண்ணீர் உதிர்த்து வாடியது எங்கே பதுங்கியதோ!............

உண்மையான அன்பு காட்டிய சிநேகிதர்களை விலக்கித் தள்ளி, உப யோக மற்றவர்களிடம் பழக்கங்கொண்டு தன்னுடைய ரகஸியங்கள் அவர்க ளுக்குத் தெரிந்துவிட அந்தப் பூனைகள் சிநேகமாக இருப்பதுபோல நடித்துக் கொண்டே இவர்களைப்பற்றி வம்பு பேசி சந்தியில் இழுத்து விடுகிறார்கள். பிறகு கண்ணீர் விட்டுப் பலன் உண்டா! இல்லை. சீச்சீ! மறப்பதா நேசம்!

அழகையும், அறிவையும், ஆற்றலையும் ஒருங்கே கொடுத்த கடவுள் அதிர்ஷ் டத்தைக் கொடாது மோசம் செய்துவிடுகிறான். அப்படியே சிநேகம் செய்த மனத்தினாலேயே விரோதிகளைப் போல நடக்கவும் சிலர் தொடங்கி விடுகி றார்கள். அவர்களுக்கு எப்படித் தான் மனம் வருகிறதோ!

தேச பக்தி

ஸரஸ்வதி:—என்ன அவசரமாகக் கடிதம் எழுதுகிறாயே! நான் வரலாமா, வரலாகாதா! கடிதம் ஏதேனும் ரகஸியமாயிருக்குமோ!

லக்ஷ்மி:—ரகஸியம் ஒன்றுமில்லை. நான் எத்தனையோ மாதப் பத்திரிகைகளும், வாரப் பத்திரிகைகளும் வரவழைக்கின்றேன். அவைகளெல்லாம் சில சமயம் தவறினும், மற்றபடியே ஒழுங்காக வந்து விடுகின்றன. இந்த ஜகன்மோகினிப் பத்திரிகை வெகு காலமாக தவறாது முதல்தேதி என் கரத்தைத் தாவி எனக்கு ஆநந்தத்தை ஊட்டி வந்தது. தற்போது சில மாதங்களாகக் குறித்த தினத்தில் வருவதில்லை. அப்படி வராத மாதங்களில் அனாவசியமாகக் கடிதமெழுதும் செலவு எனக்கு உண்டாகின்றது. அதற்குத் தான் எழுதுகிறேன். ஆவலோடு எதிர்பார்க்கும் நாளில் வராவிடில் நமக்கு எத்தனை வருத்தமாகி விடுகிறது பாருங்கள்.

ஸரஸ்வதி:—லக்ஷ்மீ! உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. உனக்குள்ள ஆவலினால் நீ இவ்விதம் அவசரப்படுகின்றாய்! தற்போது நமது தேச நிலைமையை நாம் பல பத்திரிகைகளின் மூலம் அறிந்தும் வீட்டிலிருந்தபடியேனும் ராட்டைச் சுற்றவும், கதர் கட்டவுமான தேச சேவையைச் செய்ய வகையற்று—வலிமையற்று, சுதந்தரமற்று—இருக்கிறோம். நாட்டுச் சேவையே வீட்டுச் சேவை எனப் பாடுபட்டுவரும் அநேக ஆயிரக் கணக்கான மக்களில் நமது மோகினிச் செல்வியின் ஆசிரியரும் ஒருவர். அவருடைய தேச சேவையில் நாம் தடங்கல் செய்து, ஆத்திரப் பட்டுக் கடிதமெழுதாமல் சற்று சாவகாசமாகவே அந்த ஆநந்தத்தை அடைவோமேயானால் அதுவே தற்போது நாம் தேச சேவை செய்தவர்களாவோம். நீ வீணாக ஏன் கடிதமெழுதுகிறாய். நமக்குப் பத்திரிகை வாராவிடின் 15 தேதிக்கு மேலாக எழுதும்படியாகத் தெரிவித்திருப்பதை மறந்தாயோ! பத்திரிகையின் வளர்ச்சிக்கும், தேச சேவைக்கும் பொது ஜனங்களின் ஆதரவுதான் அதி அவசியம். நாம் சற்றுப் பொறுமையாக விருப்பின் இரு காரியங்களுக்கும் நம்முடைய உதவியை அளித்தவராவோம். ஆகையினால் அவசரப்பட்டு எழுதாதே!

லக்ஷ்மி:—ஸரஸ்வதீ! நீ சொல்வதும் வாஸ்தவமே. எனக்குள்ள தேச பக்தியை நீ அறியாய். என் பர்த்தா இந்தப் போலீஸ் உத்யோகத்தில் இல்லாதிருப்பின் நானும் இந்நேரம் அந்தம்மாளுக்குத் துணையாகி இருப்பேன். தேச விஷயங்களையே நமக்கு நாவல் ரூபமாக அளிப்பதால் அதைப் படிக்கவேண்டிய ஆவலால் மனம் தவிக்கின்றது. நீ சொல்வதை உணர்ந்தேன். நாம் இவ் விஷயத்தில் பொறுமையைக் காட்டவேண்டியது அவசியமே!.... தேச பக்தியுள்ள மற்ற சந்தா நேயர்களும் தாமதத்திற்கு தயவு செய்து பொறுப்பார்களாக.

210035

பரிசுகளின் விவரம்.

7-8-வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

R. 256. Mr. P. V. Ramachandra Iyer, Tiruppatur.
K. 155. Srimathi Kamalambal, Coimbatore.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்

NOTICE

The Marriage Bureau undertakes to arrange marriage alliances among Vaishnavite Brahmins. For Rules and Regulations, apply with Two annas stamps to:

The Marriage Bureau,
Post Box No. 420,
Triplicane, MADRAS.

விளம்பரம்.

மேரேஜ் பீரோ.

இக் கலியாண சபை வைஷ்ணவர்களுக்குள் கலியாணம் முடித்துவைக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. நிபந்தனைகளுக்கு கீழ்க் கண்ட விலாசத்திற்கு இரண்டு அணா ஸ்டாம்புடன் எழுதுக.

"மேரேஜ் பீரோ"
தபால் பெட்டி நெ. 420,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

"ஜகன்மோகினி" யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

கனகசபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனை (2-பாகங்கள்)	ரூ.	2	0	0
	ருக்மிணி காந்தன்	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனை	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
ருக்மிணி காந்தன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

வத்ஸலா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.